
உன் பிரஷில் ரத்தம் கண்டால்

ஆபத்திற்கு அறிகுறி....



...பல் ஈறுகள் கெட்டுப்போகும் என்பதற்கு அதுதான் எச்சரிக்கை! கொடிய ஈறு உபாதைகளாகிய பயோரியாவோ அல்லது ஜின்ஜிவிடிஸோ உங்கள் பற்களை நாசமாக்கி தேகாரோக்கியத்தையும் பாழாக்கலாம். இந்த அபாயத்தைப் போக்க கிப்ஸ் "எஸ். ஆர்." டூத் பேஸ்ட் உபயோகியுங்கள்—அது ஈறு வியாதியைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் வல்லது. அதிலுள்ள ஸோடியம் ரெஸினோலியேட் ஈறு உபாதைகளைக் குணப்படுத்த பல் வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். வழக்கமாக கிப்ஸ் "எஸ். ஆர்." உபயோகித்தால் அது உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாகவும் பற்களை உறுதியாயும் வைத்திருக்கும்.

Gibbs

"S.R." TOOTHPASTE



GSR. 18-33 TM

D & W. GIBBS LTD., LONDON, ENGLAND

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்



அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்..



கலக்கம், ஆயாசம் இல்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது. நரம்புக்களுக்கு நன்கு வலுவூட்டுகின்றது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

நிஜாம் சமஸ்தானம், ஆந்திர தில்லாக்கள், தமிழ் நாடு முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள்:—

தாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்


ஸிகந்திராபாத் : பெஜவாடா : மதுரை

பருக்களை

ஒழிப்பதெங்ஙனம்



பருக்களுக்கும் சினப்புகளுக்கும் ஏற்ற தீவிர முறைப்படியான சிகிச்சை.



ஸாந்த் குமார், 14-ம் வயது.

த. பெ. பெ. 875, பம்பாய்

121, வெங்கடாசல செட்டித் தெரு, பார்க்டவுன் மதராஸ்

கல்கி பொருளடக்கம்

ர் 5
ம் 28

1946 பிப்ரவரி 17

பார்த்திப
மாசி 6உ

மகாத்மா காந்தி சென்னையிலிருந்து வார்தா செல்லும் மார்க்கத்தில் பெஜவாடா டேஷனில் அவரிடம் ஒரு கடிதம் கொடுக்கப்பட்டது. அந்தக் கடிதத்தில், "நீங்கள் ஜாஜியைப் பிரதம மந்திரியாக்குவதற்காகவே சென்னைக்கு வந்ததாகச் சிலர் இங்கு சாரம் செய்கிறார்கள். இதன் உண்மை என்ன?" என்று கேட்டிருந்தது.

இதற்கு மகாத்மா சொன்ன பதில் "ஹரிஜன்" பத்திரியில் பிரசுரமாயிருக்கிறது.

"தென் மாகாணத்தில் பிரதம மந்திரி பதவிக்கு எல்லாம் அதிகமான தகுதி வாய்ந்தவர் ராஜாஜிதான். என் வசத் அந்த உத்தியோகம் இருந்தால், அதை எனக்கு நானே டுத்துக் கொள்ளாவிடில், ராஜாஜியைத்தான் அழைத் கொடுப்பேன்" என்று மகாத்மா சொல்லியிருக்கிறார்.

இதிலிருந்து "ராஜாஜி பிரதம மந்திரி வேலையைப் ப்பது நானே அந்த வேலை பார்ப்பதுபோல்!" என்று த்மா கருதுவதாக ஏற்படுகிறது.




இவ்வளவு நெருக்கம் உள்ள ஒருமைப்பாடும், ஐக்கியபாவமும் ற இரு மகான்களையும் சேர்த்துப் படம் பிடிக்க வேண்டு ன்று நமது புகைப் படக்காரர் மகாத்மா சென்னையில் லிய 12 தினங்களிலும் முயற்சி செய்தார். ஆனால் அவர்கள் வரையும் சேர்த்துப் பார்ப்பதே அபூர்வமாயிருந்தபடியால் சாத்தியப்படவில்லை.

நல்ல வேளையாக, மதுரை-பழனி யாத்திரையின்போது, கங்கு பொதுக் கூட்டங்களில் அமைதி ஏற்படுத்த அவசி நேர்ந்த சமயங்களில் அவ்விருவரையும் சேர்த்துப் படம் எடுத்தல் சாத்தியமாயிற்று.

பாரத நாட்டின் இரு கண்களுக்கு ஒப்பான அவ்விரு மகான்களின் படத்தையும் த இதழ் அட்டையின் பெருமித மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம்.

இருமலை
அதன் மூலத்திலேயே தாக்குங்கள்



பெக்டுஸின் இருமலுக்கு ஆசுவாசமளிக்கவும், அதன் கடுமையைக் குறைக்கவும் செய்கிறது. அதில் ஓர் மூலாதாரமான புதிய நாசகப் பொருள் அடங்கியுள்ளதானது, சுவாசக் குழாய்களையும், சுவாசாசயங்களையும் சுத்திகரணம் செய்து, தடங்கலின்றி சுகமாக மூச்சு விடத் துணைக்கிறது.

ஜலதோஷம், இன்ப்ளுயன்ஸா ஜுரம், பீனசம், கக்குவான் இருமல்—இந்நோய்களுக்கும் பெக்டுஸின் குணகரமானது. இன்றே ஒரு பாட்டில் வாங்கிப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

Pectusyn

பெக்டுஸின் காப் ஸிரப்

ஸின்டெடிக் (இந்தியா) லிட்., பம்பாய் 7.

சென்னை மாகாணத்திற்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
கே. கே. பிள்ளை & கம்பெனி, ராயப்பேட்டை, மதராஸ்.

SNC. 6324

கல்கி

மலர் 5 } தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடிப் பாப்பா —பாரதியார் } இதழ் 28

என்ன சேதி?

..தந்திர விற்பனை!

இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆதிக்கம்
..பட்டதற்குக் காரணம் என்னவென்
..தயும் சென்ற நூற்றைம்பது வருஷ
..மாக பிரிட்டிஷ்காரர்கள் இந்நாட்டை
..க்கியான முடித்ததற்குக் காரணம்
..ன வென்பதையும் தெரிந்து கொள்ள
..ண்டுமானல், இந்திய சரித்திரப் புத்த
..தைப் புரட்டிப் பார்க்க வேண்டிய
..லை. இதோ நம் கண் முன்னுலே,
..டப் பகலிலே சிந்து மாகாணத்
..ல நடந்த ஒரு சம்பவத்தை ஆராய்ந்
..ல் போதும்.

..இன்று சிந்து மாகாணத்திலுள்ள
..ரேற மூன்று ஐரோப்பியர்களுக்
..ள சக்தி — கவர்னருக்கும் வைஸி
..க்கும், இந்தியா மந்திரிக்கும் — என்
..வுகளுக்குக் கூட இல்லை யென்று
..ல்லலாம். சிந்து மாகாணத்தின் தலை
.. அவர்கள் கையில் இருக்கிறது. ஒன்
..ரக் கோடி மக்களின் கதிமோட்சம்
..ர்கள் வசம் இருக்கிறது. அவர்கள்
..த்தால் ஒரு மந்திரி சபை ஏற்படுத்த
..ம்; அல்லது ஒரு மந்திரி சபையைக்
..ழ்க்கலாம்.

..இவ்வளவு சக்தி அவர்களுக்கு எங்
..ந்து வந்தது? யார் கொடுத்தார்கள்?
..று யாரும் கொடுக்கவில்லை. சிந்து
..காணத்துக்காரர் ஒருவரே கொடுத்
..க்கிறார். சிந்து மாகாண முஸ்லிம் லீக்
..லவர் ஸர் குலாம் ஹுஸேன் ஹிதாயத்
..லாவே வலியக் கொண்டு போய்
..டுத்திருக்கிறார்.

..ந்து மாகாணம் ஏற்பட்டதிலிருந்து
..கு ஒரு ஸ்திரமான, பலமான மந்திரி
.. பதவியில் இருந்ததே இல்லை. பதவி
.. இருக்கும் மந்திரி சபை மற்றவர்களின்
..வை எதிர்பார்த்தே வாழ வேண்டிய

தாக இருந்தது. இதனால் அங்கு நிர்வாக ஊழல் அதிகமாயிற்று. இதை யெல்லாம் போக்க விரும்பிய காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆஸாத் இந்தத் தடவை சிந்து மாகாணத்தில் காங்கிரஸ்-லீக் கூட்டு சர்க்கார் ஏற்படுத்தக் கருதி, அந்தக் கூட்டு சர்க்காரில் சேரும்படியாக லீக் தலைவர் குலாம் ஹுஸேனை அழைத்தார். ஆனல், சர் குலாம் ஹுஸேன் காங்கிரஸ் தலைவரின் அழைப்பை உதறித் தள்ளிவிட்டு கவர்னரின் அழைப்பை யேற்று மந்திரி சபை அமைத்திருக்கிறார். அப்படி அவர் மந்திரி சபை யமைக்கும் போதுதான், இரண்டரைக் கோடி மக்களின் தலைவிதியை அந்த மூன்று ஐரோப்பிய அங்கத்தினர்களிடம் அடகு வைத்திருக்கிறார். ஏனெனில், அவருடைய மந்திரி சபை உயிரோடிருக்க வேண்டுமானல், அந்த மூன்று ஐரோப்பியர்களுடைய தயவு — வோட்டு பலம் அவசியம் வேண்டும் அந்த மூன்று வோட்டுகளைப் பெறுவதற்காக சிந்து மாகாணத்தின் சுதந்தரத்தை ஐரோப்பியர்களுக்கு விற்றிருக்கிறார். இந்தியாவிலே வெள்ளைக்காரர்கள் ஆதிக்கம் ஏற்பட்டதற்கு இதைக் காட்டிலும் வேறு என்ன உதாரணம் வேண்டும்?

கவர்னரின் கைங்கரியம்

சர் குலாம் ஹுஸேனின் செய்கை ஒரு புறமிருக்க, சிந்து மாகாண கவர்னர் சர் பிரான்ஸிஸ் மூடியின் காரியம் இன்னும் பயங்கரமானது. அவர் சிந்து மாகாணத்தில் ஜனநாயகத்தைக் கொலை செய்து ஆழப் புதைத்து மூடி விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

சிந்து மாகாண சட்ட சபையிலே மொத்தம் அறுபது அங்கத்தினர்கள். இதில் காங்கிரசும் பிற கட்சிகளும் சேர்ந்த அசெம்பிளிக் கூட்டுக் கட்சி

யிலே மொத்தம் 29 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். லீக் கட்சியிலே இருபத்தெட்டு அங்கத்தினர்கள்தான் இருக்கிறார்கள். மீதி மூவர் ஐரோப்பியர். நியாயமாகப் பார்க்கப் போனால் கவர்னர் கூட்டுக் கட்சியின் தலைவரை அமைத்து மந்திரி சபையமைக்கச் சொல்லியிருக்க வேண்டும். அதைவிட்டு மைனாரிட்டிக் கட்சியின் தலைவரை அமைத்து மந்திரி சபை அமைக்கச் சொன்னதை ஜனநாயகக் கொலை என்று சொல்வது தவறாகுமா?

நாடகக் கலை மகாநாடு

சீரழிந்து போன நாடகக் கலைக்கு மறுபடியும் புத்துயிர் தோன்றியிருக்கிறது. தமிழ் நாட்டில் இப்போது எங்கு பார்த்தாலும் நாடகக் கம்பெனிகள் தோன்றி நாடகக் கலையை வளர்த்து வருகின்றன.

இசைத் தமிழ் என்றும் இயல் தமிழ் என்றும் நாடகத் தமிழ் என்றும் தமிழை மூன்று பிரிவாக்கி முத்தமிழ் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். ஆகவே, தமிழ் தோன்றிய நாள் முதலே தமிழர்கள் நாடகங்களையும் தோற்றுவித்து நடித்தும், படித்தும் அனுபவித்திருக்கிறார்கள்.

இடையில் காலக் கோளாறினால் மங்கிப் போயிருந்த நாடகக் கலைக்கு இப்போது மறுபடியும் யோகம் பிறந்திருக்கிறது. நாடகக் கலை நாளுக்கு நாள் மேலோங்கி அபிவிருத்தி அடைவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

சமீபத்தில் ஸ்ரீ எம். என். எம். பாவலர் அவர்களுடைய பெரு முயற்சியின் காரணமாக சென்னையில் ராவ் பகதூர் அருணானந்தசாமி நாடார் அவர்களின் தலைமையில் நாடகக்கலை மூன்றாவது மகாநாடு மிகவும் வெற்றிகரமாய் நடந்தேறியது பற்றி மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். மகாநாட்டின் தலைவர் தமது தலைமைப் பிரசங்கத்தில் நாடகத்தின் லட்சணங்களைப்



ஸ்ரீ அருணானந்தசாமி நாடார்

பற்றியும் தமிழர்களு... நாடகம் புராதன சொத்... என்பதைப் பற்றியும் நா... கத் தொழில் சம்பந்... பட்டவர்களின் பிற்கா... வாழ்க்கையைக் குறித்... பேசி, மேற்படி கலை... வளர்ப்பதற்கான தம... அரிய கருத்துக்களை... வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீ அருணானந்தசா... நாடார் அவர்களின் த... மைப் பிரசங்கத்தைய... மகாநாட்டில் நிறைவேறிய தீர்மான... களையும் மனப்பூர்வமாய் வரவேற்கிறோ... மேற்படி மகாநாட்டின் வெற்றிக்... மூன்று மாத காலமாய் இடைவி... மல் உழைத்த ஸ்ரீ எம். என். எம். பாவ... ருக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்க... கூறுகிறோம்.

வித்வான் மறைந்தார்

தமிழ் நாட்டில் நீண்ட காலமா... புகழ் பெற்று விளங்கிய மிருதங்க வி... வானும், சமீப காலத்தில் கஞ்சிரா வாத்... யத்தில் இணையற்று விளங்கியவருமா... ஸ்ரீ வேணு நாயக்கர் காலஞ் செ... செய்தி அறிந்து அளவில்லாத துய... அடைகிறோம்.

கஞ்சிரா வாத்தியத்தை அவ... போல் விருவிருப்புடனும் ஜிலு ஜி... புடனும் கையாளக் கூடியவர் ... சமயம் யாரும் இல்லையென்று சொ... லாம். ஸ்ரீ வேணு நாயக்கர் வித்வா... என்பதோடு ப... பக்தியுள்ள வைஷ்... வர்; சிறந்த ரசி... அவர் சங்கீத மேடை... உட்கார்ந்தாலே ச... யில் கலை கலப்பு உ... டாகும். கச்சேரி க... கட்டும். அப்பேர்ப்ப... வித்வானின் மறை... கர்நாடக சங்கீத உல... துக்குப் பெரு ந... மாகும். அருமை... தந்தையைப் பிரி... ஆராத் துயரத்தில் ஆ... அன்னாருடை... புதல்வர் - புதல்விகளு... நமது மனமார்ந்த அ... தாபத்தைத் தெரி... துக் கொள்கிறோம்.




ஸ்ரீ வேணு நாயக்கர்




உங்கள் பற்களின் உள்ளும்,
வெளியும்,
இடையேயும்,
துலக்குகிறது
நீர் கடக்காது
நனைவுமேற்காது
விஷக் கிருமிகளகற்றப்
பட்ட கிலாஸ் ட்யூபுகளில்
பாக் செய்யப்பட்டது
ஒரு வருட உத்தரவாதம்
....அதற்கதிகம் நிற்கிறது
பற்களைத் துலக்கி, வெ
ண்மையாக்குவதில் 60%
அதிக பயனளிக்க வல்லது
இப்பொழுது
ஸ்டோர்களில்—
Dr. West's
TOOTH
PASTE
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
மிருகங்களின்
மயிரே
கிடையாது!
விநியோகஸ்தர்கள் :
(இந்தியா) லிமிடெட்
121A, லிங்க செட்டித் தெரு
தபால் பெட்டி 200, மதராஸ்
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்
Copyright:
JWT (a) LTD.


D. W. 6288

நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்


காந்திஜி பெஜவாடாவில் பேசும் போது, "எனக்கு அதிகாரம்
ிருக்கும்பட்சத்தில் நான் உடனே ராஜாஜியைப் பிரதம
ந்திரியாக்கிவிடுவேன்" என்று கூறினார்.
பிரதம மந்திரி ஸ்தானம்


ாகாண சட்டசபைத் தேர்தல்களின் முடிவு லீகுக்குச்
ாதகமாக இல்லை. முஸ்லிம் லீக்கின் கோட்டை என்று கருதப்-
ட மாகாணங்கள் ஒவ்வொன்றாகப் பிய்த்துக்கொண்டு
கின்றன.
அஸ்ஸாம்
சிந்து
எல்லைப்புறம்
வங்காளம்
பஞ்சாப

மகாத்மா மகாத்மாதான்

எந்த நிலைமையிலும் எந்த சந்தர்ப்பத்திலும் உண்மையைச் சொல்லும் விஷயத்தில் சிறிதும் தயங்காத தீரம் உள்ளவர்களையே உலகம் ''மகாத்மாக்கள்'' என்றும் ''மகா புருஷர்கள்'' என்றும் போற்றுகிறது.

அத்தகைய தீரத்தில் நமது காந்தியடிகள் தலை சிறந்தவர் என்பதை நாம் அறிவோம்.

உண்மையைச் சொல்லும் விஷயத்தில் அவருக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று கிடையாது. சிநேகிதர்கள், எதிரிகள் என்பது கிடையாது. பந்துக்கள், அயலார்கள் என்பதும் கிடையாது.

தம்மை ஓயாமல் எதிர்த்துத் தூஷிப்பவர்களைக் குறித்து நல்ல வார்த்தை சொல்வது அவசியமாயிருந்தால் கட்டாயம் சொல்லியே தீர்வார்.

தம்முடைய அத்தியந்த சிநேகிதர்களையும் பந்துக்களையும் கண்டிக்க வேண்டியிருந்தால் கட்டாயம் கண்டித்தே தீர்வார்.

இதையெல்லாம் காட்டிலும் முக்கியமாக, தம்முடன் நெருங்கிய சிநேகம் உள்ளவர்களைக் குறித்துப் பாராட்டிப் பேச வேண்டியிருந்தால் அதற்கும் அவர் தயங்கமாட்டார். ''நமக்கு வேண்டியவர்களை நாமே பாராட்டினால் யாராவது ஏதாவது சொல்ல மாட்டார்களா?'' என்ற பயம் அவருக்குக் கிஞ்சித்தும் கிடையாது.

அவருடைய தர்ம பத்தினி கஸ்தூரிபாய் அம்மையைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதற்குக்கூட அவர் தயங்குவது கிடையாது.

எந்த நிலைமையிலும் எந்த சந்தர்ப்பத்திலும் அவருக்கு உண்மைதான் பிரதானம்; பொது நன்மைதான் முக்கியம்.

ஆகையினால்தான் அவரை மகாத்மா என்று உலகம் போற்றுகிறது.

• • •

சமீபத்தில் காந்தி மகான் நமது தமிழ்நாட்டுத் தலைவர் ராஜாஜியைப் பற்றித் தமது அபிப்பிராயத்தைத் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்.

அப்படி வெளியிடுவதற்கான சந்தர்
ப்பங்கள் ஏற்பட்டன.

பழனியிலிருந்து மகாத்மா சென்னை
க்குத் திரும்பி வந்தபோது, ராஜா
யைக் கண்டபடி தூஷித்து ஒரு கடித
அவர் கையில் கொடுக்கப்பட்ட
''மற்றவர்கள் காந்திஜியை அணு
ராஜாஜி விடுவதில்லை'' என்பது புகா

இந்தப் புகார் எவ்வளவு அபத்
மானது என்பதை நாம் அறிவோ
உண்மையில், ராஜாஜியின் முயற்
காரணமாகத்தான் சுமார் முப்ப
லட்சம் தமிழ் மக்கள் காந்தி மகானை
கண்குளிரக் கண்டு ஆனந்திக்க முடி
தது என்பதையும் அறிவோம்.

இதையெல்லாம் மகாத்மா காந்தியு
நன்கறிவார். எனவே, புத்துயிர் பெற்
''ஹரிஜன்'' பத்திரிகையின் முத
இதழில் மேற்படி புகார் எவ்வள
ஆதாரமற்றது, எவ்வளவு அபாண்
மானது என்பதைக் காந்திஜி குறி
பிட்டு விட்டு, மேலே ராஜாஜியை
பற்றியும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் வி
காரங்களைப் பற்றியும் தமது அபிப்பி
யத்தை எழுதியிருக்கிறார். யாரும் எதி
பாராதவிதமாகவும், திடுக்கிடத்தக்
முறையிலும் உண்மையை உள்ள
உள்ளபடி பட்டவர்த்தனமாக எழு
யிருக்கிறார். அந்தக் கட்டுரையின் மு
கியமான பகுதி பின்வருமாறு:—

''என்னுடைய மிகப் பழைய நண்பர்களி
ராஜாஜி ஒருவர். என்னுடைய இலட்
யங்கள் கொள்கைகள் எல்லாவற்றுக்கும் வா
கிலும் செயலிலும் சிறந்த முறையி
விளக்கம் கொடுப்பவர் அவர் என்பது பிரசித்
மான விஷயம். 1942-ல் அவர் என்னோ
மாறுபட்டார் என்பதை நான் அறிவேன். அ
வேறு பாட்டைப் பகிரங்கமாக வெளியிட்
அவருடைய தைரியத்தைப் போற்றுத
வேண்டும். ராஜாஜி சிறந்த சமூக சீர்தி
தக்காரர். தமது கொள்கையின்படி நடப்
தற்கு ஒரு நாளும் அஞ்சாதவர். அவருடை
அரசியல் ஞானமும் நேர்மையும் அனைவரு
ஒப்புக் கொண்டவை. ஆகவே, அப்படி
பட்டவருக்கு எதிராக ஒரு கோஷ்டி இருப்ப
தைக் கண்டு எனக்கு வேதனை உண்டாயிற்
சென்னைக் காங்கிரஸ் நிர்வாகத்தில் மேற்ப
கோஷ்டி செல்வாக்குப் பெற்றிருக்கிற
ஆனால் பொது மக்கள் ராஜாஜியிடம் பக்

காண்டிருக்கிருர்கள். தமிழ் மக்களிடம் ஜாஜிக்குச் செல்வாக்கு இருந்திரா விட்டால், ன்னுடைய யாத்திரையின் போது அவ் ளவு மகத்தான பொது ஜனக் கூட்டங்கள் டியிருக்க முடியாது. தென்னுட்டுக் காங் ரஸ் வாதிகள் தங்களுக்கு எது உசிதமென்று டுகிறதோ, அப்படிச் செய்யட்டும். ஆனல் வர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்யாவிடில் ங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு என்னுடைய டமையைச் செலுத்தியவனுக மாட்டேன். ற்போதைய நிலைமையில் ராஜாஜியைப் பால் காங்கிரஸ் தொண்டின் பொறுப்பை கித்து நடத்தக்கூடியவர் யாருமில்லை. அவ டைய ஊழியத்தைத் தென்னுட்டுக் காங் ரஸ் வாதிகள் இழந்துவிடக் கூடாது."

மகாத்மா மகாத்மாதான்! அவரைத் விர வேறு யார் இம்மாதிரி உண்மை யைப் பட்டவர்த்தனமாகவும், ஐயந்திரி க்கு இடமின்றியும் சொல்ல முடியும்?

* * *

மேலே போவதற்கு முன்னல் ரு விஷயத்தைத் தெளிவு படுத்த ரும்புகிறேம். இந்தச் சந்தர்ப்பத்தில் காத்மா இந்த விதமாக ராஜாஜியைப் ற்றி எழுத வேண்டுமென்று ாஜாஜியோ, அவருடைய கோஷ்டி னரோ விரும்பவில்லை: எதிர்பார்க்க ம் இல்லை. இதை நாம் உறுதியாகச் சால்ல முடியும்.

காந்தி மகான் தமிழ்நாட்டுக்கு வருவ ற்கு முன்னல் தமிழ்நாட்டுக் காங் ரஸ் வாதிகளுக்குள் சமரசம் ஏற்பட்டு ட வேண்டுமென்றும், மகாத்மா ஜயத்தின் போது நமக்குள்ளே எந்த தமான வித்தியாசத்தையும் காட்டிக் காள்ளக் கூடாதென்றும் ராஜாஜி காஷ்டியார் பிரம்மப் பிரயத்தனம் சய்தார்கள். அந்தப் பிரயத்தனத் ல் வெற்றி பெற்று விட்டதாகவும் ண்ணிஞர்கள்.

ஆனல் அவர்கள் எண்ணியபடி டக்க வில்லை. மகாத்மாவிடம் கொடுக் ப்பட்ட புகார்க் கடிதமானது, அவர் மற்கண்டவாறு எழுதும்படி செய்து ிட்டது.

இதைக் குறித்து ராஜாஜிக்கோ அவ டைய கோஷ்டியினருக்கோ எவ்விதச் ந்தோஷமும் இல்லையென்பதை மறு டியும் வற்புறுத்துகிறேம்.

● ● ●

எப்படியோ காந்தி மகானின் கட் ரை வெளியாகி விட்டது.

வெளியான பின்னர் தென்னுட்டுக் ாங்கிரஸ் வாதிகளின் கடமை என்ன?

அந்த உலகம் போற்றும் மகானின் அபிப்பிராயங்களைச் சிரத்தையுடன் கவனித்து அவற்றில் உண்மையிருந்தால் ஒப்புக் கொண்டு அவருடைய புத்திமதியின்படி நடக்க வேண்டும்.

அல்லது அந்த அபிப்பிராயங்கள் சரியல்லவென்று கருதினல், மகாத்மாவே அனுமதித்திருப்பதுபோல், தங்களுக்கு உசிதம் என்று தோன்றுகிற வழியில் தைரியமாக நடக்க வேண்டும்.

இந்த இரண்டு நேர்வழிகளையும் கடைப் பிடிக்காமல் ஸ்ரீ காமராஜ் நாடார் ஒரு குறுக்கு வழியைக் கடைப் பிடித்திருக்கிருர்.

தமிழ் நாடு பார்லிமெண்டரி போர்டி லிருந்து அவர் ராஜிஞமா செய் திருக்கிருர்.

இந்த ராஜிஞமாவில் அர்த்தம் இல்லை, அதற்கு அவசியம் இல்லை, அதனுல் அவருக்காவது தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வேலைக்காவது நன்மையும் கிடையாது என்று நாம் சொல்ல வேண்டியிருக்கிறது.

● ● ●

மகாத்மா தமது கட்டுரையில் இரண்டு அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிருர்; ஒரு புத்திமதியையும் கூறியிருக்கிருர். அவை வருமாறு:—

அபிப்பிராயங்கள்

(1) ராஜாஜியை எதிர்க்கும் கோஷ்டி ஒன்று தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கிறது.

(2) தமிழ் நாட்டுப் பொது மக்கள் ராஜாஜியைப் போற்றுகிருர்கள்.

புத்திமதி

(1) தென்னுட்டுக் காங்கிரஸ்காரர்கள் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் ராஜாஜியின் சேவையை இழந்துவிடக் கூடாது.

ஸ்ரீ காமராஜ் தமது ராஜிஞமா அறிக்கையில் மகாத்மாவின் அபிப்பிராயங்களை ஒப்புக் கொள்கிருரா, ஆட்சேபிக்கிருரா என்று தெளிவாகச் சொல்ல வில்லை. மகாத்மாவின் புத்திமதியைத் நாம் ஏற்றுக் கொள்கிருரா, நிராகரிக்கிருரா என்றும் தெரிவிக்க வில்லை.

ராஜாஜியைக் காங்கிரஸுக்குள் வர விடக் கூடாது என்று தமிழ்நாடு காரியக் கமிட்டியில் ஒரு கோஷ்டி பிரமாத முயற்சி செய்தது என்பதை மறுக்க முடியாது. ஸ்ரீ காமராஜ் இதை மறுக்கவும் இல்லை.

ஆனல் அப்படி ராஜாஜியை எதிர்ப்பவர்களைக் 'கிளிக்' என்று மகாத்மா சொன்னதற்காக வருத்தப்படுகிருர்.

மகாத்மா உபயோகித்த 'clique' என்னும் ஆங்கில வார்த்தைக்கு ஆங்கில அகராதியில் 'exclusive set of associates' (தனிப்பட்ட சகபாடிகள் கூட்டம்) என்று அர்த்தம் இருக்கிறது. இதில் அவ்வளவு கடுமையாக வருத்தப் படும்படி ஒன்றும் இல்லை.

அந்த வார்த்தையைத் தமிழில் 'கும்பல்' என்றோ, 'கோஷ்டி' என்றோ, 'குழு' என்றோ மொழி பெயர்க்கலாம். தமிழ்ப் பத்திரிகைகளில் 'ராஜாஜி கோஷ்டி' 'காமராஜ் கோஷ்டி' என்று சர்வ சாதாரணமாக உபயோகிக்கப் பட்டு வருகிறது.

இதற்காக வருந்தப்பட்டு ராஜிநாமா செய்வதற்கு யாதொரு அவசியமும் இல்லை. அதிலும் பார்லிமெண்டரி போர்டிலிருந்து மட்டும் ராஜிநாமா செய்வதில் அர்த்தமே இல்லை.

"பார்லிமெண்டரி வேலை காரணமாகத்தான் தகராறு எழுந்தது" என்று ஸ்ரீ காமராஜ் நாடார் கூறுவது சரியல்ல.

தகராறு எல்லாம் திருச்செங்கோடு தேர்தலிலிருந்து எழுந்தது. ராஜாஜியைக் காங்கிரஸுக்குள்ளேயே வர விடக் கூடாது என்று கிளர்ச்சியும் முயற்சியும் செய்ததிலிருந்து எழுந்தது.

போனது போகட்டும்: வரு
காலத்துக்கு மகாத்மா காந்தியின் புத்
மதியை ஏற்றுக் கொள்வதாகச் சொல்
யிருக்கிறாரா? அதுவும் இல்லை!

மொத்தத்தில் ஸ்ரீ காமராஜின் ராஜ
நாமா, மகாத்மாவின் அபிப்பிராயத்தை
மதித்து, அப் பெரியாரின் புத்திமதியை
ஏற்றுக் கொள்ளும் முறையில், செய்
ராஜிநாமா அல்ல.

மகாத்மா இப்படிச் சொல்லி விட்டாரே
என்ற வருத்தத்தினாலும் ஆத்திரத்தி
லும் செய்த ராஜிநாமாத்தான்.

இது ஸ்ரீ காமராஜ் அவர்களுக்காவ
தமிழ்நாட்டுக்காவது நல்லதல்ல வெ
பதை மீண்டும் வற்புறுத்துகிறோம்.

ஸ்ரீ காமராஜ் நாடார் ஆற அமர நி
வித்து யோசனை செய்து மே
மேலும் பிளவை வளர்த்துக் கொண்
போகாமல் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்
ஒற்றுமையும் சமரசமும் நிலவுவதற்
வேண்டிய வழியைக் கடைப்பிடிப்ப
என்று நம்புகிறோம்.

உலகம் போற்றும் உத்தம புருஷரி
நல்ல அபிப்பிராயத்தைப் பெறுவதை
காட்டிலும் ஒருவருக்கு வேறு என்
நலன் ஏற்படக்கூடும்?

அதை இழந்து விட்டு வேறு என்
லாபம் அடைந்துதான் என்ன ப
யோஜனம்?

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 20
அன்னையின் ஆசி

மறுநாள் நெடுமாறன் புவனமகாதேவியிடம் விடைபெற்றுக் கொள்வதற்காக அந்த மூதாட்டியின் அரண்மனைக்குச் சென்றான்.

மகேந்திர பல்லவரின் மகிஷி அகமகிழ்ந்து முகமலர்ந்து நெடுமாறனை வரவேற்றாள்.

அச்சமயம் அங்கேயிருந்த மங்கையர்க்கரசி வெளியேற யத்தனித்தபோது, "குழந்தாய்! ஏன் போகிறாய்? பாண்டிய குமாரனுடன் நான் பேசக்கூடிய இரகசியம் ஒன்றும் இல்லை" எனக் கூறி அவளைப் போகாமல் நிறுத்தினாள்.

பிறகு நெடுமாறனை உட்காரச் சொல்லி, "அப்பனே! எல்லா விவரமும் அறிந்து கொண்டேன். வானமாதேவி நேற்றிரவே வந்து கூறினாள். இருந்தாலும் அந்த உத்தமியின் மனதை நீ ரொம்பவும் கலக்கி விட்டாய்!" என்றாள்.

"அதற்கு நான் காரணமல்ல, தாயே! உங்கள் அருகில் ஒன்றும் அறியாத பரம சாதுவைப்போல் எங்கேயோ பார்த்துக் கொண்டு நிற்கிறாளே, அவள்தான் காரணம்! அவள் தங்களுடைய அரண்மனையிலே இருக்கிற விஷயம் குலச்சிறை மூலம் தெரிந்திரா விட்டால், நான் காஞ்சிக்கு வந்தே இருக்க மாட்டேன். வராக நதிக்கரையிலிருந்தே திரும்பிச் சென்று இத்தனை நேரம் மதுரைமா நகருக்குப் போய்ச் சேர்ந்திருப்பேன்" என்றான் நெடுமாற பாண்டியன்.

"நீ இங்கு வந்ததே நல்லதாய்ப் போயிற்று. இவ்விடம் வராமல் நீ திரும்பியிருந்தாயானால் எங்கள் எல்லாருக்கும் எவ்வளவோ வருத்தமாயும் ஏமாற்றமாயுமிருந்திருக்கும். என்ன காரணத்துக்காக நீ திரும்பிச் சென்றாய் என்று தெரியாமல் ஏதேதோ எண்ணியிருப்போம்......"

"ஆனால் இங்கு நான் வந்தும் என்னைப் பற்றி நீங்கள் எல்லாரும் ஏதேதோ தவறாக எண்ணும்படிதானே நேர்ந்து விட்டது? உங்களுக்கெல்லாம் எவ்வளவு கவலையைக் கொடுத்து விட்டேன்? தேவி! கருணை கூர்ந்து என்னை மன்னிக்க வேண்டும்" என்றான் பாண்டிய குமாரன்.

"குழந்தாய்! எனக்கு ஒரு கவலையும் நீ கொடுக்கவில்லை. உன்னைப் பார்த்தவுடனேயே நீ உத்தமமான பிள்ளை, வஞ்சகமான காரியம் எதுவும் செய்யக்கூடியவன் அல்ல என்று தெரிந்து கொண்டேன்! ஆனால் உன் தமக்கைக்கு எப்படித் தைரியம் கூறுவது என்று மட்டும் எனக்குத் தெரியவில்லை. அதற்காகக் குலச்சிறையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளை நீயே உன் தமக்கையின் கவலையைத் தீர்த்து விட்டாய்!" என்றாள் புவனமகாதேவி.

"இன்னமும்கூட நான் சொன்னது உண்மையென்று அக்கா நம்புகிறாளோ, என்னமோ சந்தேகந்தான். அம்மா! காதல் துறையைப் பற்றித் தமிழ்மொழியில் பல நூல்கள் இருக்கின்றன. ஆனால், அந்த நூல்களில் எல்லாம் ஒரு விஷயத்தைக் கூறவில்லை. காதல் கொண்டவன் எப்படியிருப்பான் என்று உண்மையாக வர்ணிக்கப்படவில்லை. காஞ்சிக்கு வந்ததில் அது எனக்குத் தெரிந்தது. ஒருவனுக்

குக் காதல் என்பது ஏற்பட்டு விட்டால் அவன் ஏதோ பயங்கரமான கொலை பாதகம் செய்யப் போகிறவனைப் போல் இருப்பான் என்று அறிந்தேன்! அதனால்தானே வானமாதேவி அப்படியெல்லாம் என்னைப் பற்றிச் சந்தேகிக்க நேரிட்டது?" என்று நெடுமாறன் கூறியதைக் கேட்ட புவனமகாதேவி குறுநகை புரிந்தாள்.

"அப்பனே! நீ காஞ்சிக்கு வந்தது முக்கியமாக எனக்குத்தான் பெரிய அனுகூலமாகப் போயிற்று. இந்தப் பெண்ணைத் தகுந்த வரனுக்கு மணம் செய்து கொடுப்பதாய் இவளுடைய தந்தைக்கு நான் வாக்குக் கொடுத்திருந்தேன். அது விஷயத்தில் நான் பிரயத்தனம் செய்ய இடமில்லாமல் நீங்களே முடிவு செய்து கொண்டு விட்டீர்கள். எனக்கு அது விஷயமான பொறுப்பு இல்லாமல் போயிற்று" என்றாள் தேவி.

"தாயே! அப்படிச் சொல்ல வேண்டாம். தங்களுடைய சுவீகாரப் பெண்ணின் கலியாண விஷயமாகத் தங்களுடைய பொறுப்புத் தீரவில்லை. தாங்கள் பிரயத்தனம் செய்வதற்கு இடம் இருக்கிறது. கொஞ்சம் மங்கையர்க்கரசியைக் கேட்டு விடுங்கள்; அவள் என்னை மணந்து கொண்டு தங்களுடைய பொறுப்பைத் தீர்த்து வைக்கப் போகிறாளா என்று!"

இவ்விதம் நெடுமாறன் சொன்னதும், புவனமகாதேவி, "அவளைப் புதிதாய்க் கேட்பானேன்? ஏற்கெனவே எல்லாம் அவள் என்னிடம் சொல்லியாயிற்று" என்று கூறிக் கொண்டே திரும்பிப் பார்த்தாள்.

திரும்பிப் பார்த்த தேவி, மங்கையர்க்கரசியின் கண்களில் கண்ணீர் ததும்பி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு, "இது என்ன? குழந்தைகள் அதற்குள்ளே ஏதேனும் சண்டை போட்டுக் கொண்டீர்களா?" என்று நெடுமாறனைப் பார்த்து வினவினாள்.

"சாதாரண சண்டை போடவில்லை, அம்மா! பெரிய யுத்தம். வாதாபி யுத்தத்துக்கு நான் போகவில்லையென்று இங்கே அரண்மனைக்குள்ளேயே யுத்தம் ஆரம்பித்தாயிற்று. இவ்வளவு தூரம் என்னைப் பைத்தியம் பிடிக்க அடித்து விட்டு, என் சொந்தத் தமக்கையே எனக்கு விஷங் கொடுத்துக் கொல்ல நினைக்கும் வரையில் கொண்டு வந்து விட்டு, இப்போது என்னை மணந்து கொள்ள மாட்டேனென்று சொல்கிறாள்! இதன் நியாயத்தை நீங்களே கேளுங்கள்!" என்றான் நெடுமாறன்.

புவனமகாதேவி மங்கையர்க்கரசியைப் பார்த்தாள். ஏதோ அனாவசியமான தடையை இவர்களே ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று தெரிந்து கொண்டாள். "குழந்தாய்! பாண்டிய குமாரன் சொல்வது வாஸ்தவமா? உன்னைத் தேடி வந்திருக்கும் மகத்தான பாக்கியத்தை நீயே வேண்டாமென்று மறுதலிக்கிறாயா?" என்று கேட்டாள்.

மங்கையர்க்கரசி விம்மலுடன் "அம்மா! தாயே! இராஜ குலத்தில் பிறந்தவர்களை நான் மணந்து கொள்வதில்லையென்று சபதம் செய்திருக்கிறேன். அதை எப்படி மீறுவேன்!" என்றாள்.

"சபதம்" என்ற வார்த்தை காதில் விழுந்ததும் புவனமகாதேவியின் நெஞ்சம் துணுக்குற்றது. தூர தேசத்தில் வாதாபி நகரத்தில் சிறைப்பட்டிருந்த சிவகாமி மூர்க்கமான பிடிவாதத்துடன் செய்த சபதத்தை நினைவு கூர்ந்தாள். துர்ப்பாக்கியசாலியான அந்தப் பெண்ணின் கதி இப்போது என்னமாயிருக்கிறதோ, இனி என்ன ஆகப் போகிறதோ என்று எண்ணிய போது அளவில்லாத மன வேதனை அந்த மூதாட்டிக்கு ஏற்பட்டது.

ஆஹா! இந்தக் குழந்தையும் அம்மாதிரி ஏதேனும் அசட்டுத்தனமான சபதம் செய்திருக்கிறாளா, என்ன?

மிக்க பரிதாபத்துடன் புவனமகாதேவி மங்கையர்க்கரசியைப் பார்த்து, "மகளே! அற்ப ஆயுளும் அற்ப பலமும் படைத்த மனித குலத்தில் பிறந்தவர்கள் சபதம் ஒன்றும் செய்யக் கூடாது. இறைவனுடைய அருளை நம்பி வாழ்க்கை நடத்த வேண்டும். நான் என்கிற மமதை கொண்டு சபதம் செய்தால், அதனால் வீணான கஷ்டங்களும் விபரீதங்களும் தான் நேரும். எல்லாம் வல்ல இறைவனை மனிதர்கள் சோதிக்கத் துணிந்தால் அதனால் நன்மை உண்டாகுமா?" என்றாள்.

இதைக் கேட்டதும், நெடுமாறன் மிக்க குதூகலத்துடன், "அப்படிச்

சொல்லுங்கள், அம்மணி! அப்படிச் சொல்லுங்கள்!" என்றான்.

பிறகு, மங்கையர்க்கரசி எந்த சந்தர்ப்பத்தில் அம்மாதிரி சபதம் செய்தாள் என்பதையும் எடுத்துக் கூறிவிட்டு இடி இடி யென்று சிரித்தான்.

புவனமகாதேவியும் அந்த வேடிக்கையைச் சற்று அநுபவித்து விட்டு, பின்னர் மங்கையர்க்கரசியைப் பார்த்து, "இதற்குத்தானா இவ்வளவு பிரமாதப் படுத்துகிறாய்? அப்படி நீ செய்த சபதந்தான் என்ன? இராஜ வம்சத்தில் பிறந்தவனைக் கலியாணம் செய்துகொள்வதில்லை யென்று எதற்காகச் சபதம் செய்தாய்? நெடுமாறனை மணந்து கொள்வதற்காக, — அவன் இராஜ குமாரன் என்று தெரியாத போது அவ்விதம் சபதம் செய்தாய். இப்போதும் நீ இவனை இராஜ குமாரன் என்பதற்காக மணந்து கொள்ள வேண்டாம்; நீ சுயம்வரமாக வரித்த புருஷன் என்பதற்காகவே மணந்து கொள்ளலாம். கடவுளாகப் பார்த்து உங்கள் இருவரையும் சேர்த்து வைத்திருக்கிறார். கடவுளின் விருப்பத்துக்கு விரோதமாக மமதையினால் பிரயத்தனம் செய்யக் கூடாது. மங்கையர்க்கரசி! நீ நெடுமாறனை மணந்து கொள்வதினால் உன் சபதத்துக்குப் பங்கம் ஒன்றும் இல்லை. உன் தகப்பனாரின் நெடு நாள் மனோரதமும் நிறைவேறியதாகும்" என்றாள்.

"தேவி! இந்தப் பெண்மணியை முன்னிட்டு நானும் என் சங்கல்பத்தை மாற்றிக் கொண்டேன் என்பதையும் கொஞ்சம் ஞாபகப்படுத்துங்கள். திகம்பர சமணர் கூட்டத்தில் சேரத் தீர்மானித்திருந்தவன் இவளுக்காகவே இல் வாழ்க்கையை மேற்கொண்டு இராஜ்ய பாரத்தையும் ஏற்கப் போகிறேன்" என்று நெடுமாறன் சொன்ன போது, இத்தனை நேரம் மலர்ந்திருந்த புவனமகாதேவியின் முகம் சிறிது வாட்டமுற்றது.

"அப்பனே! அதைப் பற்றி உன்னை நானே கேட்கவேண்டு மென்றிருந்தேன். நீயே பிரஸ்தாபித்து விட்டாய். மதுரை நகரிலும் பாண்டிய நாட்டிலும் நீங்கள் சமணர்களுக்கு அதிக இடம் கொடுக்கிறீர்களாமே? நீயும் சமணர் சங்கத்துக்கு அடிக்கடி போவதாகக் கேள்விப் பட்டேன். இதெல்லாம் உண்மைதானா? நமது தமிழகத்துக்குரிய புராதன சமயங்கள் சைவமும் வைஷ்ணவமும் இருக்கும்போது புதிதாக வந்து புகுந்த சமணமும் பௌத்தமும் நமக்கு எதற்காக? நடராஜப் பெருமானும் ரங்கநாதரும் பழனியாண்டவரும் மீனாக்ஷி அம்மனும் நமக்குக் கண்கண்ட தெய்வங்களாக இருக்கும்போது அன்னிய சமயங்களும் அன்னிய தெய்வங்களும் நமக்கு என்னத்திற்காக?" என்று சொல்லி வரும்போது, நெடுமாறன் குறுக்கிட்டான்.

"அம்மா! நடுவில் தடுத்துப் பேசுவதற்காக மன்னிக்க வேண்டும். மகேந்திர பல்லவரின் பத்தினியும் மாமல்லரின் அன்னையுமான தாங்கள் இவ்விதம் பேசுவது இயல்புதான். சைவமும் வைஷ்ணவமும் தமிழகத்தின் சமயங்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் சமணமும் பௌத்தமும் அன்னிய மதங்கள் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? இந்தச் செந்தமிழ் நாட்டிற்குச் சமணமும் பௌத்தமும் எப்போது வந்தன என்று யாரால் சொல்ல முடியும்? எத்தனையோ சமண முனிவர்களும் பௌத்த பிக்ஷுக்களும் இந்தத் தமிழ் நாட்டில் வாழ்ந்து எவ்வளவோ அரும் பெரும் பணிகளைச் செய்திருக்கிறார்கள். கலைகளையும் கல்வியையும் வளர்த்திருக்கிறார்கள். அழகுத் தமிழ் மொழியில் அரிய பெரிய இலக்கியங்களை இயற்றி யிருக்கிறார்கள். தெய்வப் புலமை பெற்ற திருவள்ளுவரின் குறளுக்கு ஈடான நூல் இந்தப் பூமண்டலத்திலே வேறு ஒன்று உண்டா?..."

"அப்பனே! அந்தக் காலத்துச் சமண, பௌத்தர்கள் வேறு; இந்தக் காலத்திலுள்ளவர்கள் வேறு. இந்த நாளில் சமண சித்தர்கள் என்போர் மந்திர தந்திரங்களைக் கையாண்டு பாமர மக்களை வஞ்சிக்கிறார்கள். திகம்பர சமணர்கள் எவ்வளவு அருவருப்பான வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது தெரியாதா?......" என்று புவனமகாதேவி சொல்வதற்குள் நெடுமாறன் மறுபடியும் குறுக்கிட்டான்.

"அப்படிப் பார்த்தால் சைவ சமயத்திலேயும் கேடுகள் இல்லையா, அம்மா!

காபாலிகர்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? மகேந்திர பல்லவர் வாழ்ந்த காஞ்சியில், மாமல்லர் ஆட்சி புரியும் காஞ்சியில், நேற்றும் இன்றும் என் கண்ணாலே பார்த்தேன். கையில் கபாலமும் மாட்டுக் கொம்பும் ஏந்திய காபாலிகர்கள் ஆண், பெண் என்கிற வித்தியாசம் இல்லாமல் கள்ளைக் குடித்துவிட்டுக் கூத்தாடிக் கொண்டும் 'ஹரஹர மகாதேவ' என்று கூச்சலிட்டுக் கொண்டும் காஞ்சிநகர் வீதிகளில் கொட்டமடிக்கிறார்களே! இதற்கு என்ன சொல்கிறீர்கள்? காபாலிகர்களைக் குறிப்பிட்டுச் சைவ சமயத்தைத் தாழ்த்திச் சொன்னால் தாங்கள் ஒப்புக் கொள்வீர்களா?"

இதைக் கேட்ட புவனமகாதேவி திகைப் படைந்து போனாள். சற்றுப் பொறுத்து, "நெடுமாறா! பாண்டிய நாட்டாரின் புலமைச் சிறப்பைக் குறித்து நான் கேள்விப்பட்டது அதிகமல்லவென்று தெரிகிறது. இந்த இளம் வயதிலேயே நீ சிறந்த புலமை அடைந்திருக்கிறாய். என்ன இருந்தாலும், நான் அந்தப்புரத்து ஸ்திரீதானே? உன்னோடு சமயங்களைப் பற்றி விவாதம் செய்ய என்னால் ஆகாது. அப்பனே! திருநாவுக்கரசர் பெருமானை நீ தரிசிக்க வேண்டும். அவரிடம் உன் சந்தேகங்களைக் கேட்டாயானால் தீர்த்து வைப்பார்" என்றாள்.

"அம்மா! எனக்குச் சந்தேகங்கள் இருந்தால் அல்லவா கேட்க வேணும்? திருநாவுக்கரசரின் தேவாரப் பாசுரங்களைக் கேட்டிருக்கிறேன். அற்புதமான இனிய இசைத் தமிழை அப்பெரியார் தமிழகத்துக்கு அளித்திருக்கிறார். அதனால் சைவம் உயர்ந்ததாயும், சமணம் தாழ்ந்ததாயும் ஆகிவிட்டது. சைவமும் வைஷ்ணவமும் யுத்தத்துக்கு உயர்வு அளித்து, போரில் இறந்தவர்களை வீர சொர்க்கத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. சிவபெருமான் எத்தனையோ யுத்தங்கள் செய்தார். மகாவிஷ்ணு இராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்து யுத்தங்கள் செய்தார். மனிதரை மனிதர் கொலை செய்வதையும் இரத்த வெள்ளம் பெருக்குவதையும் தர்மம் என்று சொல்லும் சமயங்கள் எப்படி உயர்ந்தவையாகும்? தாயே! காஞ்சிக்கு வரும் மார்க்கத்தில் அசோக சக்கரவர்த்தியின் ஸ்தம்பங்கள் சி… வற்றைப் பார்த்தேன். ஒரு காலத்தி… இமோத்கிரியிலிருந்து குமரி முனை… வரையில் இந்தப் பரத கண்டம் அந்… பௌத்த சக்கரவர்த்தியின் ஆணை… யின் கீழ் இருந்தது! ஆகா! தர்… ராஜாதி ராஜன் என்று அசோகனை… யல்லவா சொல்ல வேண்டும்? யுத்த… செய்து, இரத்தம் சிந்தி, தமது சா… ராஜ்யத்தை விஸ்தரிக்க அந்த மக… புருஷர் கண்டிப்பாக மறுத்து விட்டா… அல்லவா? அப்படிப்பட்டவரை… அளித்த பௌத்த சமயம் தாழ்வான… என்று சொல்வீர்களா?"

நெடுமாறன் ஆவேசம் வந்தவ… போல் சரமாரியாகப் பேசினான்… அதற்கு முக்கிய காரணம், அங்கே… மங்கையர்க்கரசி நின்று தன்னுடை… பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தா… என்பதுதான்.

தன் பேரில் மங்கையர்க்கரசிக்கு… அளவில்லாத அன்பு இருந்த போதி… லும் தான் வாதாபி யுத்தத்துக்கு… போகாமல் மதுரைக்குத் திரும்பி… போகும் காரணத்தினால் அவளுக்கு… தன் பேரில் மதிப்புக் குறைந்து போய்… விடுமோ என்ற சந்தேகம் நெடுமா… னுடைய அந்தரங்கத்தில் இருந்து… கொண்டிருந்தது. அதற்குப் பதிலா… வாக்கு யுத்தத்திலே புவனமகாதேவி… யைத் தோற்கடித்துத் தன்னுடைய… மதிப்பை நிலைநாட்டிக் கொள்ளலாம்… என்று கருதினான் போலும்!


ஆனால் அதனுடைய பலன் அவன்… எண்ணியதற்கு நேர்மாறாக ஏற்பட்… டது என்பதை நெடுமாறன் சீக்கிரத்தி… லேயே கண்டான்.

இந்தப் பிள்ளையின் மனம் சமண… பௌத்தர்களின் போதனையினால்… இவ்வளவு தூரம் கெட்டுப் போயிருக்… கிறதே என்று புவனமகாதேவி மனம்… வருந்தியதோடு, "இம்மாதிரி மனப்… பான்மை உள்ளவன் வாதாபி யுத்தத்… துக்குப் போகாமல் மதுரைக்குத்… திரும்புவதே நல்லது" என்று எண்… ணினான். பிறகு சொன்னாள்:—

"குழந்தாய்! உன்னோடு என்னால்… விவாதம் செய்து ஜயிக்க முடியாது… ஆனாலும் ஒன்று சொல்கிறேன்… மகேந்திர பல்லவரை நான் மணந்… புதிதில் அவரும் இந்த மாதிரிதான்…

த்தத்தைப் பற்றிப் பேசிக் கொண் ருந்தார். ஆனால் வாதாபி அரசன் ல்லவ ராஜ்யத்தின்மேல் படை யடுத்து வந்தபோது அவருடைய காள்கை யெல்லாம் மாறிப் பாயிற்று. போர்க் கலையை அவட் யம் செய்தது பற்றிப் பச்சாத்தாபப் ட்டார். பாண்டியர் குல தெய்வமான னாக்ஷி அம்மன் அருளால், உனக்கு அந்த மாதிரி ஒன்றும் நேர வேண் டாம். ஆனாலும் ஒருவேளை பாண்டிய ாட்டின்மேல் எந்த அன்னிய அரச வது படையெடுத்து வரும் பட்சத் தில் அப்போது நீயும் உன்னுடைய கொல்லாமை விரதம் முதலிய பௌத்த சமணக் கொள்கைகளை யெல்லாம் வைகை நதியில் விட்டு விட்டுக் கையில் கத்தி எடுத்துப் போருக்குக் கிளம்பு வாய்!'' என்றான்.

நெடுமாறன் ஏதோ மறுமொழி சொல்லத் தொடங்கினான். தேவி அவனைத் தடுத்து, "அப்பனே! இந்தப் பேச்சுப் போதும். சமயங்களைப் பற்றி விவாதம் செய்ய ஆரம்பித்தால், அதற்கு முடிவே கிடையாது. மேலே நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றிப் பேசலாம். இந்தப் பெண்ணை



வாழ்க்கைத் துணைவியாகப் பெறுவதற்கு நீ எவ்வளவோ பாக்கியம் செய்திருக்க வேண்டும். இவள் தாயில்லாப் பெண். தந்தையும் போர்க்களத்திலிருந்து திரும்புவாரோ என்னமோ, தெரியாது. இவளுடைய மனம் எந்த விதத்திலும் கோணாமல் நீ நடந்து கொள்ள வேண்டும்" என்று கூறி, மங்கையர்க்கரசியைப் பார்த்து, "குழந்தாய்! இன்னும் ஏன் இப்படி ஒதுங்கி நின்றுகொண்டிருக்கிறாய்? இப்படி என் எதிரில் வா! உங்களுடைய திருமணத்தைக் கண்டு ஆனந்திக்கும் பேறு எனக்குக் கிட்டாது. இப்போதே உங்கள் இருவரையும் ஆசீர்வதிக்க விரும்புகிறேன்" என்றாள்.

தேவி இவ்வாறு சொல்லி முடித்ததும் மங்கையர்க்கரசி விம்மிக் கொண்டே வந்து அவள் பாதத்தில் நமஸ்கரித்து, "அம்மா! இவருக்கு நான் என் உள்ளத்தைப் பறி கொடுத்து இவரை என் பதியாக வரித்தபோது இவர் சமணர் என்பது எனக்குத் தெரியாது......" என்று சொல்லி மேலே பேச முடியாமல் தேம்பினாள்.

நெடுமாறன் பெருங் கவலைக்குள்ளானான். "இது என்ன, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே?" என்று அவன் திகைத்து நிற்கையில், புவனமகா தேவி அவனைப் பார்த்து, "அப்பனே! இந்தக் குழந்தை சைவ குலத்தில் பிறந்தவள்,—சிவபெருமானையும் பார்வதியையும் வழிபடுகிறவள் என்று உனக்குத் தெரியுமல்லவா? அதற்கு ஒன்றும் தடை செய்ய மாட்டாயே?" என்று கேட்டாள்.

நெடுமாறன் அந்த சங்கடமான நிலைமையிலிருந்து விடுபட வழி கிடைத்தது என்ற உற்சாகத்துடன், "அம்மா! அப்படிப்பட்ட மூர்க்கன் அல்ல நான். சமண சமயத்தில் நான் பற்றுக்கொண்டவனாலும் சைவத்தை வெறுப்பவன் அல்ல. என் ஆருயிர் நண்பனான குலச்சிறை அபாரமான சிவ பக்தன். நான் சுரமாய்க் கிடந்தபோது இங்கே வந்து திருநாவுக்கரசர் பெருமானிடம் திருநீறு வாங்கி வந்து எனக்கு இட்டான். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. மதுரையில் இருக்கும்போது அவன் காலை, மத்தியானம், மாலை மூன்று வேளையும் ஆலயத்துக்குச் சென்று மீனாக்ஷியம்மனையும் சுந்தரேசுவரரையும் தரிசித்து விட்டு வருவான். அம்மாதிரியே இவளும் செய்யட்டும். நான் தடை சொல்லவில்லை!" என்றான். அப்போதுதான் மங்கையர்க்கரசியின் முகம் முன்போல் பிரகாசமடைந்தது.

அந்த அபூர்வமான காதலர் இருவரையும் புவனமகாதேவி தன் எதிரில் தம்பதிகளைப்போல் நிற்கச் செய்து ஆசி கூறி வாழ்த்தினாள்.

இன்னும் சிறிது நேரம் மேலே நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு நெடுமாறன் அவ்விருவரிடமும் விடை பெற்றுக் கொண்டு சென்றான்.

அவன் சென்ற பிறகு புவனமகா தேவி மங்கையர்க்கரசியை அன்போடு அணைத்துக் கொண்டு, "குழந்தாய்! நீ கவலைப்படாதே! நீ சில நாளாக அடிக்கடி கண்டு வரும் கனவைப் பற்றிச் சொன்னாயல்லவா? உன் கனவு நிச்சயம் பலிக்கும். நெடுமாறன் சிவ பக்தியில் சிறந்தவனாவான். அந்தப் புண்ணியத்தை நீ கட்டிக் கொள்வாய்!" என்று ஆசி கூறினாள்.

* * *

நெடுமாறனிடமும் மங்கையர்க்கரசியிடமும் இந்தக் கதையைப் பொறுத்தவரையில் நாமும் இப்போது விடைபெற்றுக் கொள்ள வேண்டும். அப்படி விடை பெறுமுன், நெடுமாறன் விஷயத்தில் புவனமகா தேவியின் வாக்கு முழுதும் உண்மையாயிற்று என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். பிற்காலத்தில், நெடுமாறன் ஸ்ரீசம்பந்தப் பெருமானின் பேரருளால் சிறந்த சிவநேசச் செல்வனானான். யுத்தம் சம்பந்தமான அவனுடைய கொள்கையும் மாறுதல் அடைந்தது.


இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, வாதாபி புலிகேசியின் மகன் விக்ரமாதித்யன் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்து பாண்டிய நாட்டை அடைந்தபோது நெல்வேலிப் போர்க்களத்தில் அவனை நெடுமாறன் முறியடித்துத் தமிழகத்தின் சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்றான்.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்
ஏ. கே. ராஜாமணி, பேரளம் போஸ்டு, தஞ்சை ஜில்லா.

மகாத்மா யாத்திரை

'காந்தி ஸ்பெஷல்' கிளம்பி விட்டது!

(மகாத்மா காந்தியின் தமிழ் நாட்டு யாத்திரையில் ரயில்வே உத்தியோகஸ்தர்கள் மிக்க சிரத்தை காட்டி ஒத்துழைத்தார்கள். மகாத்மா ஸ்பெஷல் வண்டியின் இன்ஜின் முகப்பை இவ்விதம் அழகாக அலங்கரித்திருந்தார்கள்.)





விழுப்புரம் ஸ்டேஷனில் கொஞ்சம் குழப்பமாயிருந்தது. எனவே, அதிதியை அழைத்துச் சென்றவர்களுக்கு அதிக தொண்டைச் சேதம் நேர்ந்தது.

மேற்படி விழுப்புரம் குழப்பத்தில், பொது ஜனங்களோடு போலீஸ் ஜவான்களும் அருமையாக ஒத்துழைக்க காட்சி!







விழுப்புரத்துக்கு நேர்மாறாக, உளுந்தூர்ப் பேட்டையில் அமைதி நிலவிற்று. காரணம், கூட்டத்தை நிர்வகித்த ஸ்ரீ சேலம் சுப்பிரமணியம் தாம் முதலில் உட்கார்ந்து வழி காட்டியதுதான். பத்திரிகை நிருபர்களும் வெகு சுறு சுறுப்பா யிருக்கிறார்கள்.



விருத்தாசலத்தில், "உட்காருங்கோ! ஹோ!" என்று ஸ்ரீ எல் என் ஜி. கர்ஜனை செய்கிறார்

காரியத்திலேயே கண்ணாயிருந்த மகாத்மா "ரயில் புறப்படப் போகிறது! பஹலே பைஸா தீஜ்யே!" என்று கேட்கிறார்






அரியலூர் ஸ்டேஷனுக்கு
காந்திஜி ஸ்பெஷல்
வந்து விட்டது!

ஸ்ரீரங்கம் ஸ்டேஷ
னுக்கு இதோ வந்து
கொண்டிருக்கிறது!





காந்தி மகான் கையி
லேயே ஹரிஜன நிதிக்
காகக் காசும் பணமும்
கொடுக்கும் பாக்கியம்
வழி நெடுகிலும் பல
ருக்குக் கிடைத்தது!


காந்திஜி ஸ்பெஷல் வருவதற்கு முன்பே
திருச்சி ஜங்ஷன் இந்தப் பாடு பட்டது!





மகாத்மா வந்த
பிறகோ அநேக
ருக்குந் தரையிலே
கால் நிற்கவில்லை!
பலருக்குந் திறந்த
வாய் மூடவில்லை!

அந்தகைய மாபெருங்
கூட்டத்தினருக்கும்
மகாத்மா மேடை
மீதேறிச் சில வார்த்
தைகள் பேசினார்!






மணப்பாறை ஸ்டேஷனில்
மகாத்மாவின் மனதுக்குகந்த
காட்சி தென்பட்டது!

சோழவந்தான்
ஸ்டேஷனிலே நமது
புகைப்படக்காரரின்
உள்ளம் களிக்கும்
காட்சிகாணப்பட்டது!





மீரா கீதங்கள்

இளந்தென்றல் இனியது; புது மலரின் ...மணம் இனியது; நிர்மலமான நீரோடை ...னியது; நீலவானத்தில் சுடர் விட்டு ...ிரும் நட்சத்திரங்கள் மிகவும் இனியன.

இம்மாதிரி எத்தனையோ இன்பங்களை ...றைவன் நமக்காக அளித்திருக்கிறார். இந்த ...லக வாழ்க்கையில் சாதாரணமாக ஏற்படும் ...ன்பங்களை யெல்லாம் மறக்கச் செய்யும் ...யான அநேக இன்பங்களை இயற்கை ...் நிறைத்து வைத்திருக்கிறார்.

ஆனால் அந்த இன்பங்களை அநுபவிப் ...ற்கு எல்லாரும் கொடுத்து வைத்திருக் ...ர்களா என்றால், அதுதான் இல்லை. ...யற்கையின் இன்பங்களை உணர்ந்து ...நுபவிக்கும் அதிர்ஷ்டம் பாக்கிய சாலிக ...ன சிலருக்குத்தான் கிட்டுகிறது. ...ண்ணீரிலும் பூவிலும் என்ன மண்ணாங் ...டி இருக்கிறது?" என்று அலட்சிய ...ச் சொல்லிவிட்டுப் போகிறவர்களும் ...கில் இருக்கிறார்கள்.

• • •

இறைவன் மனித குலத்துக்காக ...ளித்திருக்கும் இன்பங்களுக்குள்ளே சங் ...் இன்பம் மிகவும் மேன்மையானது.

சங்கீதம் உயர்ந்ததாயும், உணர்ச்சியோடு ...ந்ததாயும் அமைந்து விட்டால், அதில் ...படும் ஆனந்தம் ஏறக்குறைய ஒரு ...ாதையாகி ரசிகர்களை மெய்மறக்கச் ...ய்து விடுகிறது.

ஆனால் அத்தகைய சங்கீத ஆனந்தத்தை ...நுபவிப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க ...ண்டும்; அதற்குரிய பண்பாடும் ரசிகத் ...மையும் வேண்டும்.

"எனக்குச் சங்கீத ஞானம் கிடையாது; ...லும் உங்களுடைய தாளும் கானமும் ...வும் மதுரமா யிருக்கின்றன" என்று ...ந்தி மகாத்மா ஸ்ரீமதி எம். எஸ். ...புலக்ஷ்மி பாடிய கீதங்களைக் கேட்டுவிட்டு ...முவந்து ஆசீர்வதித்தார்.

"சங்கீத ஞானம்" என்று மகாத்மா ...ிப்பிட்டது, சங்கீதக் கலையின் முக்கிய ...்சங்களான ராகம், தானம் முதலிய வேறுபாடுகளையும் ஸ்வரபேத நுட்பங்களையும் தெரிந்து கொள்ளும் ஆற்றல்.

இத்தகைய சங்கீத ஞானம் எல்லாருக்கும் இருப்பதில்லை; இருக்கவேண்டிய அவசியமும் இல்லை.

ஆனால், நல்ல சங்கீதத்தைப் பொதுப் படையாகக் கேட்டு அநுபவிக்கும் சக்தி எல்லாருக்கும் அவசியம் வேண்டும்.

அத்தகைய சக்தியைப் பெறாத துர்ப் பாக்கியசாலிகளைக் குறித்துத்தான், மகா கவி ஷேக்ஸ்பியர், "சங்கீதத்தை அநுபவிக் கத் தெரியாதவனை நம்பவேண்டாம்; அவன் துரோகம் முதலிய கொடுஞ் செயல்களுக்கு அஞ்சாத வஞ்சகனாயிருப்பான்" என்றார்.

இதிலிருந்து, சங்கீதத்தை அநுபவிக்கத் தெரியாதவர்கள் எல்லாரும் துரோக வஞ்சகர்கள் என்று ஷேக்ஸ்பியர் சொல்வதாக அர்த்தம் செய்ய வேண்டியதில்லை.

அப்பேர்ப்பட்டவர்களுடைய துர்ப்பாக்கியத்தை நினைத்துப் பரிதாபப் பட்டுத்தான் மகாகவி ஷேக்ஸ்பியர் மேற் கண்டவாறு சொன்னதாகக் கொள்ளவேண்டும்.

• • •

தமிழ் நாட்டில் உள்ள நாம் சங்கீதத்தை அநுபவிக்கும் விஷயத்தில் ரொம்பவும் கொடுத்துவைத்தவர்கள்.

நல்ல சங்கீதத்தை நம்மால் அநுபவிக்க முடியும். அதோடு, நல்ல சங்கீதம் நமக்குச் சுலபமாகக் கிடைக்கவும் செய்கிறது.

அகில இந்தியாவுக்குள்ளேயும் இந்த ஒரு விஷயத்தில் தமிழர்கள் நிச்சயமாக பாக்கிய சாலிகள்; ஒப்பற்ற பாக்கியசாலிகள்.

அந்த பாக்கியம் எவ்வளவு விசேஷமானது என்பது, எச். எம். வி. கம்பெனியார் வெளி யிட்டிருக்கும் மீரா இசைத் தட்டு கீதங்களைக் கேட்டுப் பார்த்தால் தெரியவரும்.

* * *

குழந்தை மீராவின் மழலைக் குரலில், "நந்த பாலா என் மனோரா" என்று ஆரம்ப மாகும் இனிய மழலை கீதத்தை H T 122 நம் பர் உள்ள பெரிய அளவு இசைத் தட்டில் கேட் கும் போது, கண்ணன் விக்ரஹத்துக்கு முன் னால் குழந்தை மீரா நின்று ஆனந்தமாய் ஆடு வதும் பாடுவதும், விக்கிரகத்துக்கு அருகே அமர்ந்து கண்ணனுடன் கொஞ்சுவதும்

கொஞ்சுவதும் மனக்கண் முன்பு வருகின்றன. பின்னர் தொடரும் பின்னணி சங்கீதம் படிப் படியாக உயர்ந்து, மேலும் மேலும் உயர்ந்து, அலை எறிந்து கொந்தளித்து, மேலும் பொங்கி உயர்ந்தோங்குவது, குழந்தை மீரா நாளடைவில் வளர்ந்து மங்கை மீரா வாக மாறுவதையும், அதே சமயத்தில் அவளுடைய உள்ளத்தில் சுடர் விடும் பக்திக் கனல் மேலும் மேலும் சுடர் விட்டு ஓங்கு வதையும் நமது அகக் கண் முன்னால் பிரத் யட்சமாக்குகின்றன.

பின்னர் ''முரளி மோகனா'' என்று கம்பீர மான கார்வையுடனும் கதறுகின்ற உருக்கத் துடனும் கேட்கும் மங்கை மீராவின் குரல், யமுனைக் கரையில் நின்று குழல் ஊதி ஊதி மீராவை அழைக்கும் மாயக் கண்ணனின் வேய்ங் குழலோசையாகவே நமது செவியில் விழுகின்றது.

இந்த இசைத் தட்டின் மற்றொரு புறத்தில் அந்த பாலகோபாலனின் மதுர வேணு கானத்தையே கேட்டு விடுகிறோம். மகா ராணாவின் விருப்பத்தின்படி மகாராணி மீரா தர்பார் மண்டபத்துக்குப் புறப்பட்டுச் செல் லும் வழியில், வேய்ங்குழலின் நாதம் அவள் காதிலே அமுதம் போல் பாய்கிறது. மெய் மறந்த மீரா கிரிதாரியின் கோயிலுக்கு ஓடிச் சென்று, ''நீல ஹரே தயாளா என் உயிர்க் இனிய மணவாளா'' என்று அகம் கரைந்து பாடுகிறாள்; பக்தர்களுக்கு மத்தியில் நின்று மெய் மறந்து ஆடுகிறாள்.

இந்தப் பாட்டின் இடை இடையே கேட்கும் பின்னணி சங்கீதமானது, அதே நேரத்தில் மகாராணாவின் தர்பாரில் நடக்கும் ஆடல் பாடலின் பரபரப்பான வேகத்தையும், மீரா வராத காரணத்தினால் ராணாவின் உள்ளத்தில் பொங்கும் கோபக் கொதிப்பையும் ஒருங்கே எடுத்துக் காட்டுகின்றது.

பின்னணி சங்கீதம் என்பது எதற்காக ஏற்பட்டது, அதை எப்படிக் கையாளவேண் டும் என்பதற்கு இந்த இசைத் தட்டு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

• • •

உயர்ந்த சங்கீதத்தில் உள்ளத்தை மயக் கும் போதை ஒன்று இருக்கிறது என்று சொன்னோமல்லவா?

உயர்ந்த சங்கீதத்திலே மட்டும் அல்ல; இனிய செந்தமிழிலும் அத்தகைய போதை உண்டு. அழகிய தமிழ்ச் சொற்களை அமைக் கும் முறையிலே அமைத்து விட்டால், அந்த இன்பத்துக்கு இணையே கிடையாது என்று சொல்லத் தோன்றும்.

அப்படியிருக்க, உயர்ந்த சங்கீதமும் இனிய செந்தமிழும் அவற்றோடு உணர்ச்சி பாவமும் சேர்ந்து விட்டால் விளைவு என்னமா யிருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை. கண்கள் பனித்திட வேண்டியதுதான்; கல் மனமும் கனிய வேண்டியதுதான்.

'' காற்றினிலே வரும் கீதம் ''

அக்கீதம் கேட்போரின் கண்கள் பனித்திடச் செய்யும் கீதமேயாகும்.

'' நிலாமலர்ந்த இரவில் தென்றல்
உலாவிடும் நதியில்
நீல நிறத்துப் பாலகன் ஒருவன்
குழல் ஊதி நின்றான் ''

என்னும் சொல்லின்பம் ததும்பும் வரிகளை உணர்ச்சி மிக்க இனிய குரலில் கேட்கும் போது, எத்தகைய கல் மனந்தான் கனி கொள்ளாமல் இருக்க முடியும்?

இந்த N 18256 நெம்பர் இசைத்தட்டின் மறு பக்கத்தில், மீரா அரண்மனை வாழ்க்கை யும் அரச போகத்தையும் துறந்து பரதே யாக யாத்திரை கிளம்பும் போது,

'' மறைந்த கூண்டிருந்து விடுத்தே
பிறந்த பறவை விரைந்தோடுதே!''

என்று தொடங்கும் பாடலைக் கேட்கிறோ சொல்ல முடியாத சோகத்தோடு சொல் முடியாத ஆனந்தமும் கலந்திருக்கும் அபூர் நாடக கட்டங்களுக்குக் கமாசு ராகத்தை காட்டிலும் பொருத்தமான ராகம் வேறில் யென்று முடிவு கட்டுகிறோம்.

• • •

செஞ்சுருட்டி ராகத்தின் இனிமையை வெல்லம் வடித்து எடுத்துச் செய்ததுபோ அமைந்திருக்கும் ''எனது உள்ளமே நிறைந் நின்ற வெள்ளமே'' என்னும் கீ N 18253 நெம்பர் இசைத்தட்டின் ஒரு பக் திலும், வசந்த பைரவி ராகத்தில் அமை ''பிருந்தாவன கீதம்'' இன்னொரு பக்கத் லும் ஒன்றைவிட ஒன்று இனிமை மிக்கதா சேர்ந்திருக்கின்றன.

காடு மலைகளையும் பாலை வனங்களையு கடந்து மீரா பிருந்தாவனத்தை அடை போது அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தி நந்தகுமாரன் புரிந்த விந்தைகள் எல்லா மீராவுக்கு நினைவு வருகின்றன.

அந்த லீலைகளின் நினைவுகளினால் மீ வுக்கு ஏற்பட்ட பரவசத்தையும், ''அந் நாளும் வந்திடாதோ!'' என்று அவ உள்ளம் கொண்ட ஏக்கத்தையும் ஒருங் சித்திரிப்பது இந்த பிருந்தாவன கீதம்.

'' மானினம் நாணிடும் மங்கையரோடு
மாதவத்தோரும் மயங்கிடு மாறு
தேனின் இனித்திடும் தீங்குழல் ஊதி
தேவர்கள் பாடிட மோகனம் செய்தான்!''

என்பது போன்ற வரிகளில் உள்ள தமிழின் பமும் இசை இன்பமும் ரசிகத்தன்மை உள் யாரைத்தான் மயக்கச் செய்யாது?

• • •

துவாரகாபுரி ஆலயக் கதவு திறக்குமா மீரா பாடிக் கதறிய பாட்டு H T 121 பெ அளவு இசைத்தட்டில் வெளியாகி யி கிறது. பாட்டைக் கேட்கும்போது மீ படத்தின் கடைசிக் காட்சி நம் கண் முன் நிற்கிறது. ''எல்லா அம்சங்களிலும் இவ்வளவு குறையில்லா மேன்மை பொருந்தி காட்சியை இதுவரையில் நான் எங் கண்டதில்லை'' என்று ஸ்ரீ புல்லா ரெ மீரா படத்தைத் திறந்து வைத்தபோ கூறினார். பாட்டும் அவ்வளவு மேன்மை யாகவே அமைந்திருக்கிறது.

'' கடலில் குதித்தொரு முத்தெடுத்தேன்
கைநழுவ விடுவாயோ? கருணையே புரிவாயோ?''

என்ற வரிகளில் பாபநாசம் சிவன் அவர் கவிதையின் எல்லையை எட்டி யிருக்கி என்று சொல்ல வேண்டும்.

இதன் மறு பக்கத்தில் மீராவின் [illegible] மனோ நிலையில் அவளுடைய பக்திப் பெருக் வெளியிடும் ''சராசரம்'' என்னும் பாடல்

"பாதமலர்ப் படிந்திடும் வண்டாய்
நாதனே உன்னிசை பாடுவேன் கண்டாய்"

என்னும் வரிகள் இசை வண்டின் இனிய சங்கீதத்தைப் போல் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன.

* * *

மீரா ஒட்டகத்தின் மீதேறி எல்லையில்லாப் பரந்து கிடந்த பாலைவனத்தைக் கடந்து சென்றும் போது பாடிய,

"எங்கும் நிறைந்தாயோ! இன்று
எங்கு மறைந்தாயோ?"

என்னும் பாட்டின் மெட்டும் பொருளும் சந்தர்ப்பத்துக்கு வெகு பொருத்தமாயமைந்திருக்கின்றன.

இதிலுள்ள பின்னணி சங்கீதமோ, முடிவில்லாத பாலைவனத்து வெட்ட வெளியையும், அதில் ஒட்டகங்கள் அசைந்தாடிச் செல்வதையும் சப்த ரூபத்தில் சித்திரிக்கின்றன.

இந்த N 18254 நெம்பர் இசைத் தட்டின் மறுபுறத்தில் "அரங்கா" "யதுநந்தன" என்னும் கோஷ்டி கீதங்கள், இடையிடையே மீராவின் இனிய தனிக் குரலுக்கு இடங் கொடுத்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

* * *

குன்றின் சிகரத்தில் நின்று மீரா பாடும் விருத்தம், மீரா கீதங்களுக்குள்ளே சிகரம் என்று சொல்வது மிகையாகாது. "உடல் உருக உளம் உருக" என்று ஆரம்பமாகும் இந்த உருக்கமான பாடல், பூர்வி கல்யாணி, சஹானா, மாயாமாளவ கௌளை ஆகிய மூன்று ராகங்களில் உடலும் உள்ளமும் உண்மையிலேயே உருகுமாறு உணர்ச்சியுடன் பாடப்பட்டிருக்கிறது. அநாவசியமான சங்கதிகளோ, அதிகப்படியான ஆலாபனைகளோ இல்லாமல் விஷயமே பிரதானமாகக் கொண்டு பாடப்பட்டிருக்கிறது. பூர்வி கல்யாணியிலிருந்து சஹானாவுக்கு மாறுகிற இடமும், "இடர்க்கடலில்" என்று மாயாமாளவகௌளையில் தொடங்கும் கட்டமும் மெய்சிலிர்க்கும்படி அமைந்திருக்கின்றன.

இந்த N 18255 இசைத்தட்டின் மறுபுறத்தில் "கிரிதர கோபாலா" என்னும் மோகன ராக கீதம் வெகு கம்பீரமாய் அனைவரை உயர்த்திருக்கிறது.

* * *

"ஆன்று! என் கருணைக் கடலே! இந்த ஏழையைக் காப்பாற்ற விஷத்தை நீ உட்கொண்டாயோ?" என்று மீரா கிரிதாரியின் விக்கிரகத்தைப் பார்த்துக் கேட்டு விட்டு,

"மறவேனே எந்நாளுமே"

என்று பாடுகிறாள் அல்லவா? இந்தப் பாக ராகப் பாட்டில் இன்னும் இரண்டு சரணங்கள் புதிதாகச் சேர்த்து N 18257 நெம்பர் இசைத் தட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதன் மறு பக்கத்தில், மீராவின் கீதங்கள் தேசமெங்கும் பரவுகின்றன என்பதைக் காட்டுவதற்காக அமைந்த "கீதம் செய்வாயே" என்னும் கோஷ்டி கானம்.

பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமானைத் தரிசிக்கச் சென்ற முனிவர்கள் அங்கே திருமாலைக் காணாது அதிசய மடைகிறார்கள். அந்த முனிவர்களோடு சங்கரன், இந்திரன், சந்திர சூரியர் முதலான தேவர்களும் சேர்ந்து ஸ்ரீமந் நாராயணனைத் தேடுகிறார்கள். எங்கெல்லாமோ தேடிக் காணாமல் கடைசியாக நந்த கோகுலத்து ஆயர் குடிசை ஒன்றில் கோபியரிடம் வெண்ணெய் கேட்டு வாங்கி பகவான் உண்டு கொண்டிருப்பதைக் கண்டு அளவில்லா வியப்படைந்த சம்பவம் இந்தப் பாட்டில் விவரிக்கப் படுகிறது.

"மீரா ஹ்ருதயம் கோயில் கொண்டான்
மீரா அருமை கொண்டான்"

என்னும் இடத்தில் கேட்கும் கார்வையில், நாதப் பிரவாகம் தங்கு தடையின்றிப் பொங்கிப் பாலி மலை அருவியாகப் பொழிகின்றது.

* * *

மீரா இசைத் தட்டுகள் மொத்தம் ஏழு வெளியாகியிருக்கின்றன. இந்த இசைத் தட்டுகளைப் பற்றி ஒரு சங்கடம் என்னவென்றால், இவற்றில் எது ரொம்ப உயர்வானது, எது அடுத்த தரமானது என்று கண்டு பிடிப்பது சாத்தியமில்லை. ஒவ்வொரு கீதமும் ஒவ்வொரு விதத்தில் உயர்வாக இருப்பதால், ஒவ்வொன்றைக் கேட்கும் போதும் அதுதான் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது என்று தோன்றுகிறது.

மீரா இசைத் தட்டுகளில் ஸ்ரீமதி எம். எஸ்ஸின் குரல் அப்படியே இயற்கையாகக் கேட்கும்படியாக ஒலிப்பதிவு மிகத் திறமையாகச் செய்திருக்கிறார்கள்.

இத்தகைய சம்பிரமமான இனிய இசை விருந்தைத் தமிழ் மக்களுக்கு அளித்ததின் பொருட்டு எச். எம். வி. கம்பெனியாரைப் பெரிதும் பாராட்ட வேண்டும்.



அரைக்கீரை விதைத் தைலம்

●

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண், எரிச்சல், கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். அண்டு கோ., கும்பகோணம்

●

மதராஸ் விடி ஏஜெண்டுகள் :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ், பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

ஸ்டாக்கிஸ்டு :

B. பாலபட்டாபி, வைசியாள் தெரு, கோயமுத்தூர்

ஸ்டான்னெக்ஸ்டா

அஞ்சனம்

முகப்பரு, புண், கூடி, ரணம், சொறி சிரங்கு களைப் போக்கவல்லது

கரப்பான் புண்ணுக்கு கைகண்ட மருந்து

டின் 1-க்கு ரூபா 1.

ஸ்மித் ஸ்டானிஸ்ட்ரீட் & கோ., லிமிடெட்

கல்கத்தா, பம்பாய், சென்னை, லக்ஷ்மணபுரி, காரச்சி, அமிருதஸரஸ்

அசுவத்தாமன்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

துரியோதனனுடைய முடிவைப் பற்றிய விவரங்கள் அசுவத்தாமனுக்குத் தெரிந்ததும் அவனுக்குக் கடல் போல் கோபம் பொங்கிற்று. தந்தையான துரோணரைக் கொல்லுவதற்காகச் செய்யப்பட்ட வஞ்சனையையும் இப்போது துரியோதனனை யுத்த முறைக்கு முற்றிலும் விரோதமாகக் கொன்றதையும் எண்ணி அசுவத்தாமன் துரியோதனன் விழுந்து கிடந்த இடத்துக்குச் சென்று "இந்தப் பாண்டவர்களை இன்றிரவே நான் கொல்லப் போகிறேன்!" என்று சபதம் செய்தான்.

மகிழ்ச்சி பரவசமடைந்த துரியோதனன் உடனே பக்கத்தில் நின்றவர்களுக்குச் சொல்லிக் கௌரவ சேனைக்கு அசுவத்தாமனைத் தலைவனாக அபிஷேகம் செய்வித்து "உம்மை நம்பினேன்" என்று சொன்னான்.

* * *

இருள் சூழ்ந்த ஒரு காட்டில் பெரிய ஆலமரத்தடியில் கிருபரும் கிருதவர்மனும் அசுவத்தாமனும் தங்கினார்கள். சூரியன் அஸ்தமித்து விட்டான். களைப்பினால் கிருபரும் கிருதவர்மனும் தரையில் கிடந்தபடியே தூங்கிப் போனார்கள். அசுவத்தாமனுக்குத் தூக்கம் வரவில்லை. கோபமும் துவேஷமும் மேலிட்டுச் சர்ப்பம் போல் சீறிக் கொண்டிருந்தான். இராக் காலத்துப் பிராணிகள் சத்தமிடுவதைக் கேட்டுக் கொண்டு ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

அந்த ஆலமரத்துக் கிளைகளில் காக்கைகள் கூட்டமாக இரவில் தங்கித் தூங்கிக்கொண்டிருந்தன. அப்போது ஒரு பெருத்த கோட்டான் வந்து தூங்கிக் கொண்டிருந்த காக்கைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கொத்திக் கிழித்துக் கொன்று கொண்டிருந்ததை அசுவத்தாமன் பார்த்தான். இரவில் கண் தெரியாமல் அலறி அலறி உயிர் விட்ட காகங்களைப் பார்த்து அசுவத்தாமனுடைய மனதில் ஒரு தீய எண்ணம் உதித்தது. "இந்த அதமர்களான பாண்டவர்களையும் என் தகப்பனாரைக் கொன்ற பாஞ்சாலனையும் அவர்களைச் சேர்ந்த

அனைவர்களையும் இந்தக் கோட்டா
காக்கைகளைக் கொன்றதைப் போல் பா
றைகளில் தூங்கிக் கிடக்கும் போது
உள்ளே புகுந்து எளிதில் கொன்
விடலாம். பாண்டவர்கள் செய்த அதரு
யுத்தத்திற்குப் பிரதி செய்து விட்டு
பழி தீர்த்துக் கொள்வேன். இந்த
பறவையால் நான் யுத்த முறை உ
தேசம் பெற்றேன். சந்தர்ப்பத்துக்கு
தக்கவாறு புது முறைகளை உபயோகி
பதில் அநீதி ஒன்றுமில்லை. சத்துருக்க
களைத்திருக்கும் நேரத்திலோ சேனை
பிளவு பட்டு நிற்கும் சமயத்திலோ தா
கலாம் என்று சாஸ்திரமே இருக்கிறது
பலம் இழந்து விட்ட நாம் அவர்களை
தூங்கும்போது தாக்குவதில் என்ன
தோஷம்? அவ்வாறு செய்தால் தா
அக்கிரம முறையில் வெற்றி பெற்
இந்தப் பாண்டவர்களை நாம் இப்போ
தோற்கடிக்க முடியும்" என்று நிச்சய
செய்து கொண்டான்.

இந்த எண்ணத்தை உறுதி செய்
கொண்டதும் கிருபரை எழுப்பித் தன் தீ
மானத்தை அவருக்குச் சொன்னா
அசுவத்தாமனுடைய யோசனையை
கேட்ட கிருபர் வெட்கமடைந்தார். "இ
முற்றிலும் தகாது. உலகத்தில் இ
வரையில் நடைபெறாத அக்கிரமமாகு
யாருக்காக நாம் யுத்தத்தில் கலந்தோமோ
அந்த அரசன் கொல்லப்பட்டான். ந
முடைய கடமையை நாம் முற்றிலு
முறைப்படி செய்து தீர்த்தோம். பேரா
சைக்காரனும் மூர்க்கனுமான துரியோ
தனனுக்காக நாம் போர் செய்தோம்
ஆனால் தோற்றோம். இனி மேல் இந்த
காரியம் பயனற்றுப் போய்விட்ட
என்று நாம் விட்டு விட வேண்டும்
போய் திருதராஷ்டிரனையும் புகழ் பெற்
காந்தாரியையும் யோசனை கேட்கலாம்
அவர்கள் சொல்லுகிறபடி செய்யலாம்
மகா புத்திமானான விதுரரையும் கேட்
லாம். அவர்கள் சரியான யோசனை
சொல்வார்கள். அந்தப்படி செய்யலாம்
என்றார்.

அசுவத்தாமனுக்குச் சோகமும் கோப
மும் இன்னும் அதிகரித்தது. "மனித
களின் புத்தியும் யோசனையும் அவரவ
களுக்கு அவரவர்களுடையது சரியாகவே

தான்றும். இந்தப் பாண்ட
ர்கள் துரியோதனனைக்
கான்றதும் என் தந்தையைக்
கான்றதும் பெரிய அதருமம்.
கையால் அதற்குப் பிரதி
ன் எண்ணியிருக்கிறபடி
சய்வதே சரி என்று எனக்குத்
தான்றுகிறது. இதைச் செய்
ால்தான் அரசன் விஷயத்தி
ம் பிதாவின் விஷயத்திலும்
ன் கடன் தீர்த்தவனாவேன்
ன்பது என் உறுதியான
டிவு. இன்றிரவு பாண்டவர்
ளின் பாசறைகளில் புகுந்து
வசமின்றிப் படுத்துத் தூங்
ம் திருஷ்டத்யும்னனையும்
ாண்டவர்களையும் கொல்லப்
ாகிறேன்'' என்றான்.



இதைக் கேட்ட கிருபர் மிகவும் துக்க
டைந்தார். "உலகத்தில் மிக்க புகழ்
பற்றிருக்கிறாய். இது வரையில் நிஷ்
ளங்கமாயிருந்த உன் வெள்ளைத் துணி
ல் ரத்தம் தெளித்தாற்போல் உன் புகழ்
தனால் கெட்டுப் போகும். தூங்கிக்
காண்டிருக்கிறவர்களைக் கொல்வது ஒரு
ாளும் தருமமாகாது. வேண்டாம்!''
ன்றார்.

''நீர் என்ன சொல்லுகிறீர்? இந்தப்
ாண்டவர்கள் தருமம் என்கிற அணையை
டைத்து எறிந்து விட்டார்கள். எல்லா
யுதங்களையும் கீழே எறிந்துவிட்டு உட்
ார்ந்த என் பிதாவைத் தலையின்றிக்
கான்றார்கள். இனி என்ன தருமம்
ச்ச மிருக்கிறது? ரதத்தை விட்டுத்
ரையில் இறங்கி மண்ணில் புதைந்து
மூழ்கிய சக்கரத்தைத் தூக்கிக் கொண்
ருந்த கர்ணனை இவர்கள் அதரும முறை
ல் தாக்கிக் கொன்றார்கள். அரசர்கள்
ார்த்துக் கொண்டிருக்கும் போதே
மன் துரியோதனனை நாபிக்குக் கீழே
டித்துக் கொன்றான். இனி ஏது
ருமம்? பாண்டவர்கள் தருமம் என்கிற
ணையை உடைத்து விட்டார்கள்.
ம்பு கடந்து அதருமத்தில் இறங்கிய
ர்களைப் பற்றி ஏன் நாம் தருமத்தை
ராய வேண்டும்? என் பிதாவைக்
கான்றவர்களான பாஞ்சாலர்களைத்
ங்கும் போது கொன்று அதனால் நான்
ழுவாகவோ பக்ஷியாகவோ ஜன்மம்
த்தேனானாலும் அதை நான் விரும்பு
றேன்'' என்று அசுவத்தாமன் மூடி
கச் சொல்லி விட்டுக் குதிரைகளைத்
ரில் பூட்டிச் சத்துருக்களிருக்குமிடம்
ாகப் புறப்பட்டான்.

இதைப் பார்த்த கிருபரும் கிருதவர்மா
ம் "அசுவத்தாமா! என்ன காரியம் செய்யப் போகிறாய்! நீ தனியாகப் போகலாமா? நீ சென்ற வழியில் நாங்களும் செல்வோம். எந்தப் பாவமாயினும் சரி, அதில் நாங்களும் பங்கு எடுத்துக் கொள்வோம்!'' என்று அவர்களும் அசுவத்தாமனுடன் சென்றார்கள்.

* * *

திருஷ்டத்யும்னனது பாசறையை அவர்கள் அடைந்தார்கள். கவசத்தைக் கழற்றி விட்டுத் திருஷ்டத்யும்னன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். தூங்கிக் கொண்டிருந்த வீரன் மேல் அசுவத்தாமன் குதித்துக் கால்களால் துவைத்துக் கோரமான முறையில் கொன்றான். அவ்வாறே எல்லாப் பாஞ்சாலர்களையும் திரௌபதியின் புத்திரர்களையும் கொன்றான்.

இப்படி அது வரையில் கேட்டிராத கொடிய செய்கையைக் கிருபரும் கிருதவர்மனும் அசுவத்தாமனும் செய்துவிட்டுப் பாண்டவர்களின் பாசறைகளுக்குத் தீ வைத்து விட்டார்கள். நெருப்புப் பற்றிக் கொண்டதும் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுந்து ஒன்றும் விளங்காமல் இங்குமங்கும் ஓடினார்கள். அவ்வாறு ஓடியவர்கள் அசுவத்தாமனால் இரக்கமின்றிக் கொல்லப் பட்டார்கள்.

''நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்து விட்டோம். இனி நாம் சந்தோஷமாகத் துரியோதனனிடம் போகலாம். அவன் உயிருடன் இருப்பானானால் அவனுக்குப் பிரியமுண்டாக்கும் இந்தச் செய்தியைச் சொல்வோம்'' என்று துரியோதனன் குற்றுயிராகக் கிடந்த இடத்துக்கு மூவரும் சென்றார்கள்.

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

சென்ற வாரத்திய இருபெரியார் வித்வான்களின் கானங்களில், 9வ. சென்னை நிலையத்திலிருந்து கேட்ட முசிறி சுப்ரமணிய அய்யரது ஒன்று. அவரது சாரீரம் அன்று சௌகரியமாகவே இருந்த தெனலாம். கச்சேரியும் நன்கு அமைந்தது. சாவேரி ராகம் விரிவாயும் உருக்கமாயு மிருந்ததோடு 'துருகா' கிருதி. நிரவல் ஸ்வர ப்ரஸ்தாரங்களும் பாவப் பொழிவா யிலங்கின. சங்கராபரணம் அதிக விஸ்தாரமா யில்லையாயினும் வனப்பா யிருந்தது. கடைசி ராகமாளிகையும் அப்படியே.

11வ. இரவு நிகழ்ச்சியில் அமைந்த முடிகொண்டான் வெங்கடராமய்யரது மற்றொரு பெரிய கச்சேரி. அரிய ஞானம்; அபார சாதகம்; உழைத்துப் பாடும் இயல்பு; இவற்றுடன் அன்று சாரீரமும் நன்றாய் வாய்த்தது என்றால் கேட்க வேண்டுமா? விஸ்தாரமாய் வழங்கிய எதுகுல காம்போதிக்கே முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். பெரும்பாலும் ஸியாமா சாஸ்திரிகளின் கிருதிகளே கேட்டன. 'காமாக்ஷி,' 'மறவாமல்' உருப்படிகளில், ராகபாவம் ததும்பும் ஸங்கதிகளையும் நிரவல்களையும், அவற்றுக்குமேல் வேறு போட முடியுமா என்று நினைக்குமாறு அமோகமாய் வாரி யளித்தார்.

* * *

4வ. சென்னையில் திருவையாறு சுபத்ராவின் கானம் கவனிக்கத் தக்கதா யிருந்தது. மதுரமான குரலில் கரஹரப்ரியா ராகத்தையும், 'பக்கல நிலபடி'யில் நிரவல் ஸ்வரங்களையும் நேர்த்தியாய் வழங்கினார்.

5வ. சென்னையில் கேட்ட வி. எஸ். ராஜத்தின் கானத்தில் விஜயநாகரி ராகம் அழகா யிருந்தது.

அன்றிரவு அதே நிலையத்தில் எஸ். பிருகபாணி நய சாரீரத்தில் நாட்டை, பஹுதாரி, உதய ரவிச்சந்திரிகா இவைகளோடு, ரகுப்ரியா என்ற 42-வது மேள ராகத்தையும் கையாண்டது பாராட்டத் தக்கது. அந்த ராகத்தின் சுத்த ரிஷப, சுத்த காந்தார ஷட்ச்ருதி தைவத ப்ரயோகங்கள் பக்க வாத்யமா யமைந்த வயலினில், தெளிவாயும் கோவையாயு மிருந்தன.

6வ. சென்னையில் டி. எஸ். கோமதி, இனிப்பும் கனிப்பும் கொண்ட குரலில் ஷண்முகப்ரியா ராகத்தைத் தாராளமாய் விட்டுப் பாடியது கவர்ச்சியா யிருந்தது.

அன்று மாலை அதே நிலையத்தில் பாடிய காளிதாஸ் நீலகண்டய்யரின் ஆனந்தபைரவி சங்கராபரண ராகங்களும், உருப்படிகளும் ஞான பாவத்துடன் தரமா யிருந்தன.

7வ. சென்னையில் கனசாரீரம் கொண்ட கண்ணனின் சாவேரி, ஆரபி ராகங்களும், சாவேரி உருப்படியில் ஸ்வரப்ரஸ்தாரமும் கவனத்தை யீர்த்தன.

எஸ். சுப்ரமணியன், ஸ்திரீயின் குரலோ என்று முதலில் சந்தேகிக்கும்படியான சாரீரத்தில் நல்ல உருப்படியும், சுகவழியும் சேர்ந்த தன்யாசி ஹிந்தோள வஸந்தா ராகங்க வழங்கினார்.

எஸ். பாலசுப்ரமணியம், நய சாரீரத்தி பிர்க்காப் பொழிவுடன். நிதானமும் நாஸ ரும் கொண்டு, தோடியை ஒரு கை பார்த்தார் 'நீ தயராவலே' உருப்படியும், இறுதி ரா மாலிகையும் நேர்த்தியா யிருந்தன.

அன்று இரவு நிகழ்ச்சியில் பாடிய கே. ராமசா யின் கரஹரப்ரியா, கானடா ராகங்களு 'அல்லவேர' என்ற ஆனந்தபைரவி உருப்ப யும் வசீகரமா யிருந்தன. அன்றிரவு மு நேரக் கச்சேரி செய்த ஸி. எஸ். கிருஷ்ணனி பேகடா, சாவேரி, காம்போதி, வரா ராகங்கள் நல்வடிவங்களா யிலங்கின.

8வ. சென்னையில் மதுரமான குரலில் வீ யுடன் பாடிய என். சொக்கம்மாளின் கான குறிப்பிடத் தக்கது. தோடி சிறப்ப யிருந்தது.

9வ. சென்னையில் திருவாடி வி. வி. ராம சந்திரன் பாட்டும், நிகழ்ச்சியில் எம். ஆ குஞ்சம்மாளின் கானமும் கவனத்தைக் கவர் தன. நடுத்தர சாரீரம் படைத்த முதல்வரி சங்கராபரணம், வந்தனதாரிணி, சு சாவேரி ராகங்கள் சிறப்பா யிருந்தன. இர டாமவர் இனிய குரலில் கேதாரகௌளை வாசஸ்பதி, ஸிம்மேந்திரமத்யம ராகங்களை நிறம்படக் கை யாண்டார்.

10வ. இரவு நிகழ்ச்சியில் மன்னார்குடி சே சாவித்திரி அம்மாளின் கோட்டு வாத்திய உயர்ந்த ரகமா யிருந்தது. அத்துட கேட்ட அவர் பாட்டும் மனம் கவர்ந்த கல்யாணி, மாயாமாளவகௌளை ஆலாப களும், உருப்படிகளும் நாஸூக்கா யிருந்த

அன்று சென்னையில் திருமுல்லைவாயல் நாதன், என். ராஜகோபாலன், வி. சூடாம டி. எஸ். ஞானாம்பாள், ராஜலக்ஷ்மி சந்தான இவ் வைவர்களின் கச்சேரிகளும் ஒன்றோ டொன்று போட்டி யிட்டன. முதல்வரி சாவேரியும், பூர்விகல்யாணியும் இரண்ட மவரின் தோடியும் தரமா யிருந்தன. சூடா மணியின் கனிப்பும் இனிமையும் கொண் குரலிலிருந்து, சங்கராபரணம் விரிவாயு நிதானமாயும் வந்ததோடு, 'பருத்த வி உருப்படியில் நிரவல் ஸ்வரங்களும் நேர்த் யாய் இருந்தன. டி. எஸ். ஞானாம்பாளி கல்யாணி, ஆபோகி ராகங்களும் ராஜலக்ஷ் யின் காம்போதியும் மனோஹரமா யிருந்த

11வ. காலையிலும் இரவிலும் நிகழ்ச்சியில் கல்யாணசுந்தரம் சகோதரர்களின் நாக ஸ்வர வாத்திய சங்கீதம் ஜமாவா யிருந்தது.

அன்று மாலை அதே நிலையத்தில் ஆ தண்டபாணி அய்யர் தோடி, ரஞ்சனி, யாணி, பைரவி ராகங்களையும் உருப்படிக யும் சிறப்பாய் வழங்கினார்.

சென்னையில் ஆர். சியாமளா, மதுரமா குரலில் வீணையுடன் இழைந்து, ஷண்மு ப்ரியா ராகத்தையும் தானத்தையும் நி படக் கையாண்டார்.

கையெழுத்து

எஸ். வி. எஸ்.

கையெழுத்து வேட்டையாளர்களிடமிருந்து தப்புவதற்கு — ஒரு யுக்தி கையாளுகிறார் நமது காந்தி யடிகள். அதாவது ஐந்து ரூபாய் ஹரிஜன நிதிக்குக் கொடுத்தால்தான் கையெழுத்துத் தருகிறார். ஆனால் இப்படி யெல்லாம் ஒழுங்காக ரூபாய் கொடுத்துக் விட்டு கையெழுத்துப் பெறுவதில் என்ன சுவாரஸ்யமிருக்கிறது?

ஒரு ஆயுர்வேத மருந்து வாங்கி ரொம்ப பக்தி சிரத்தையுடன் மகாத்மாவுக்கு அனுப்பி வைத்தார் சென்னைக் கையெழுத்து வேட்டைக்காரர் ஒருவர்.

அதற்கு "இந்த மருந்தை உபயோகிப்பதற்கான நோய் எனக்கு வரவில்லை, வந்தனம்" என்று பதில் எழுதி யிருந்தாராம் காந்திஜி. உடனே சென்னை வாசி, "தாங்கள் அந்த மருந்தை உபயோகப்படுத்த வேண்டுமென்ற அவசியம் இல்லை. எப்படியாகிலும் தங்களிடமிருந்து பணம் கொடுக்காமல் கையெழுத்துப் பெறவேண்டும் என்பதற்காகவே நான் மேற்படி யுக்தியைக் கையாண்டேன்" என்று பதில் எழுதினார்.

"இப்படி யெல்லாம் என்னை ஏமாற்றுவது நன்றாக இல்லை" என்று தமாஷாக பதில் எழுதினாராம் மகாத்மா.

அதற்கு நம் நண்பர் "எப்படியோ தங்கள் கையெழுத்து நோட்டிக்கு இரட்டியாக எனக்கு கிடைத்து விட்டது. எனக்கு வேண்டியது அவ்வளவுதான்" என்றாராம்.

* * *

இங்கிலாந்தில் ஒரு பெரிய எழுத்தாளர். அவருடைய கையெழுத்துக்கும் உலகம் ஏங்கித் தவிக்கும். லேசில் தம் கையெழுத்தைத் தரமாட்டார். தந்தாலும் பணத்துக்குத்தான் தருவாராம்.

இவர் ஒருசமயம் தம்மை போட்டோ எடுத்துக் கொண்டார். போட்டோ எடுப்பவன் இருபது பவுன் கேட்டான் படம் எடுத்ததற்கு. அடேயப்பா! ஜாஸ்தியாக இருக்கிறதே? என்று தோன்றியது. உடனே என்ன செய்தார் என்கிறீர்கள்? தன் பாங்கு 'செக்' புஸ்தகத்தை எடுத்தார். இரண்டு பவுனுக்கு ஒரு 'செக்' வீதம் இருபது பவுனுக்கும் பத்து 'செக்' எழுதினார்.

போட்டோ எடுத்தவனுக்கு ஒ…ும் புரியவில்லை! அவர் 'செக்' எழு… முடித்தவுடன் என்ன சொன்னார் தெரியும… "என் கையெழுத்தை இரண்டரைப் ப…னுக்கு விற்கிறேன். அதனால் இந்த இரண்… பவுன் 'செக்' ஒன்றை நீ இரண்டரை… பவுன் வீதம் விற்றால் கேட்டத… மேலேயே உனக்குப் பணம் கிடைத்… விடும். மேலும் என் கையெழுத்தன்… இந்த 'செக்'கை யாருக்கும் பாங்கி… கொடுத்துப் பணமாக மாற்ற மனம் வரா… ஆகவே என் பணத்துக்கும் செலவில்… இந்த முறையினால் உனக்கும் லாப… எனக்கும் நஷ்டமில்லை!" என்றாராம்.

இப்படிப்பட்ட தந்திரம் செய்த எழு…தாளர் யார் என்று தெரியுமா? வேறு யா…யிருக்க முடியும்? ஜியார்ஜ் பர்னட்ஷா தா…

* * *

கையெழுத்து வேட்டையில் ஈடுபட்…வர்கள் சிலர் வெகு கெட்டிக்காரர்க…யிருப்பார்கள். அவர்களுடைய ஊக்கமு… விடா முயற்சியும் அபாரமா யிருக்கு… "மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் …" என்ற பாடல் அவர்களுக்காகவே ஏற்ப…டதோ என்று தோன்றும்.

மேற்படி வேலையில் கெட்டிக்காரனு… என் சிநேகிதன் ஒருவன் ஒரு ந… ரொம்ப சந்தோஷத்துடன், "அவர் க…யெழுத்தை வாங்கிவிட்டேன்" என்றா… யாரோ ஒரு பெரிய மனிதர் கையெழுத்… என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

"எப்போது?" என்று கேட்டேன்.

"இன்றைக்கு நடந்த பொதுக் கூட்ட…தில்" என்றான்.

"அவர் என்ன பேசினார்?"

"அது யார் கண்டது?" என்றா… எனக்கு வருத்தமாக இருந்தது. அவரிட… எப்படியாவது கையெழுத்து வாங்க வே…டுமே என்ற கவலையினால், அவர் ஒரு ம… நேரம் பேசியது இன்னதென்றே அவ… கவனிக்க வில்லை! சுத்த அசடு!

அசடு என்றா சொன்னேன்? ஒருவி…தில் அவன் கெட்டிக்காரன் என்… தோன்றுகிறது. அந்த ஒரு மணி நேர… அவருடைய பேச்சைக் கவனித்ததில் க… அடைந்த லாபம் என்ன? தலைவலிதானே…

காலக்ஷேபம்

மதிப்புரை!

நண்பன்:—டேய் ராமு! நேற்று நான் உன்னிடம் வாங்கிச்சென்ற புத்தகம் மிகவும் மோசமானது போலிருக்கிறதே!

ராமு:—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? புத்தகத்தை முழுதும் படித்துப் பார்த்தாயா?

நண்பன்:—இல்லை! நேற்று நான் போகிற வழியில் அதைப் பார்க்கில் வைத்து மறந்து விட்டேன். இன்று போய்ப் பார்த்தால் அது அங்கேயே இருக்கிறதே!

—எஸ். ஆர். மணி.

★

தாராள நன்கொடை!

முதல்வர்:—எங்களூரில் ஹரிஜன நிதிக்கு ஆயிரம் ரூபாய் சேர்க்கத் தீர்மானித்தார்கள். நான்தான் அதைப் பூர்த்தி செய்து கொடுத்தேன்.

மற்றவர்:—ஏது! ஊரில் உங்களுக்கு அவ்வளவு செல்வாக்கா?

முதல்வர்:—ஊம்! அதெல்லாம் இல்லை. ரூ 999-15-9 வரைதான் சேர்த்திருந்தார்கள். மீதித் தொகையை நான் போட்டுப் பூர்த்தி செய்தேன்!

—வெ. நடராஜன்.

★

நல்ல காரணம்!

மனைவி:—எப்பொழுது பார்த்தாலும் வீட்டிற்குள்ளேயே உலாவிக் கொண்டிருக்கிறீர்களே! கொஞ்சம் வெளியில் போய்விட்டு வந்தால் தான் என்ன?

புருஷன்:—வெளியில் உலாவப் போனால் கூட்டம் கூடிவிடுமே என்று பயமாயிருக்கிறது!

மனைவி:—நீங்கள் என்ன பெரிய தேசத் தலைவரா? கூட்டம் கூடி விடுமே என்று பயப்படுவதற்கு?

புருஷன்:—அதெல்லாம் இல்லேடி! ரொம்ப பேரிடம் கை மாற்றாகப் பணம் வாங்கியிருக்கிறேன்! அவ்வளவுதான்!

—பி. கணேச சுப்ரமண்யன்.

★

புரிய வேண்டாம்!

பஸ்ஸில் கண்டக்டருக் கருகிலுள்ள 'ஸீட்'டில் உட்கார்ந்திருந்த கணவனும் மனைவியும் உரத்த குரலில் ஓயாமல் பேசிக்கொண்டிருந்ததினால், கண்டக்டருக்கு மற்றப் பிரயாணிகளுக்கு டிக்கட் கொடுத்துப் பணம் வசூலிப்பதில் சிரம முண்டாகி மனக் குழப்ப மேற்பட்டது.

கண்டக்டர் (எரிச்சலுடன்):—ஸார்! நீங்கள் ஓயாமல் பேசுவதில் எனக்கு ஒன்றுமே புரிய மாட்டேனென்கிறது!

பிரயாணி (நிதானமாக):—நாங்கள் எங்கள் குடும்ப விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். இது உங்களுக்குப் புரிய வேண்டிய அவசியமேயில்லை.

—வி. கஸ்தூரிரங்கன்.

கெட்டிக்காரப் பையன்!

சுப்பிரமணிய ஐயர் (பெருமையாக):—ஸார்! என் பையன் கடிதம் எழுதினால் நான் அகராதியைத் தேடிப் போகவேண்டியிருக்கு!

சாமிநாத ஐயர்:—நீங்கள் அதிர்ஷ்டசாலி ஸார்! என் பையன் கடிதம் எழுதினால் நான் 'பாங்கி' யைத் தேடிப் போக வேண்டியிருக்கு ஸார்!

—என். ஆர். வெங்கடாச்சாரி.

★

பாதிதான்!

மாமியார்:—ஏன் உனக்கு தோசை வார்த்துக் கொள்ள வில்லை? எனக்கொன்றும் அவனுக்கு ஒன்றும் தானே வார்த்திருக்கிறாய்?

நாட்டுப்பெண்:—எனக்கு எதற்கு? நீங்க பாதியும் அவர் பாதியும் கொடுத்தால் அதுவே எனக்குப் போதும்.

—து. ரங்காச்சாரி.

★

காரணம்!

நண்பன்:—ஏண்டா ராமு, யாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது?

ராமு:—என் மனைவியிட மிருந்துதான் வந்திருக்கிறது.

நண்பன்:—உன் மனைவி எங்கிருக்கிறாள்?

ராமு:—பிறந்தகத்திலிருக்கிறாள்.

நண்பன்:—என்னடா, கவருக்குள்ளே ஒன்றும் எழுதாத கடிதம் இருக்கிறதே?

ராமு:—அவளும் நானும் கொஞ்ச நாளாகப் பேசுவதில்லை. அதனால்தான் வெறும் காகிதத்தை அனுப்பி யிருக்கிறாள்.

—எஸ். காஜா.

★

பிரமாதக் கச்சேரி!

சங்கீத ரஸிகர்:—நேத்திக்கு நம்ப கப்பு பாகவதர் பாடும்போது ஜனங்களிட மிருந்து கச்சேரி மேடைக்கு எவ்வளவு சீட்டு சென்றது தெரியுமா?

நண்பர்:—கச்சேரி பிரமாதம் போலிருக்கு?

ரஸிகர்:—அதெல்லாம் ஒன்றுமில்லை. மங்களத்தைத்தான் சீக்கிரம் பாடச் சொல்லி எழுதி யிருந்தது.

—வி. வெங்கடேசன்.

★

ஆபீஸ் ரகசியம்!

மானேஜர்:—இப்போது, புதிதாக நாம் நியமித்த குமாஸ்தா, என்னைப்பற்றி, வெளியில் "சுத்த அசடு" என்று சொல்லிக் கொண்டு வருகிறானாமே?



தலைமைக் குமாஸ்தா:—ஆபீஸ் ரகசியங்களை வெளியில் சொல்லக் கூடாதென்பது, புதிதாக வருகிற ஆசாமிகளுக்கு, எங்கே தெரிகிறது?

—பி. என். ராஜா.

கை நீட்டிய தோசம்



(சென்ற வாரத் தொடர்ச்சி)

பொருமழூர் மந்தை வெளியில், சாரை சாரையாக ஆண்களும், பெண்களும் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்தனர்.

கோதிச் செருகிய கொண்டையையு அள்ளிச் செருகிய கொண்டையையு வாழைப் பூக் கொண்டையையும் அவிழ்த் விட்டு, வேடுவப் பெண்களைப் போல் அ வரும் தங்களுடைய கூந்தலைச் சீவி உச் யில் சேர்த்துக் கட்டியிருந்தனர். அ போல் பக்கக் கொசுவச் சேலையையும், மு கொசுவச் சேலையையும், களைந்து விட் வேடுவப் பெண்களைப் போலவே தார்ப்பாச் வைத்துக் கட்டிக் கொண்டார்கள். கையி கம்பு, சுளுக்கி, கவண் கயிறு, மடி நிறை கற்கள் முதலில் கேடயம்போல் உ யோகிக்க ஒரு முறம் முதலியவைகளுட பெண்கள் சென்றனர் ஆண்களை தொடர்ந்து.

ஆண்கள் மழுக்கத் தலையைச் சீவி அழுக் மாகக் கொண்டை போட்டுக் கொண் அந்தக் கொண்டையைச் சுற்றி ஊசியை செருகிக் கொண்டு, அரையில் வெறு லக்கோடு அணிந்த வண்ணம், கையில் சட் வேல் கம்பு, மீன் மூன்று, கட்டாரி, அ வாள் முதலியவைகளை எடுத்துக் கொண் முன்னே சென்றனர்; பொருமழூரே கட்டு பாடுடன் திரண்டு வந்து வீரய்யத் தே னின் தலைமையில் காத்து வாயிலை நோக்

பொருமழூர்ப் பெண்களின் கைகள் துப்பாக்கியைப் போல கூழாங் கற்களை கவணில் வைத்துச் சுழற்றிச் சுழற் விட்டன. 'விஸ், விஸ்' என்று காற்றி கற்கள் சீறிப் பாய்ந்து, சாமபாண்டியனி ஆட்களைத் தாக்கி ஓடச் செய்தன. கம்பு கழியும், போட்டது போட்டபடி எ திசையோ பேர் காத்து மேட்டை விட் விட்டு ஓடினர், காக்கையைப் போல.

பெண்கள் கல்லை விட்டு எறிய, கூட இருந்த ஆண்கள் மற்றவர்களை அடித்து துரத்த, சாமபாண்டியனை நேருக்கு நே சந்திக்கச் சென்றான் வீரய்யத் தேவன்.

புளியமரத்தடியில் தனித்து நின் கொண்டிருந்த சாமபாண்டியன் தாக்குண் புலியைப்போல் காணப்பட்டான். மீசை துடி துடிக்க, 'நறநற'வென்று பல்லைக் கடி தான். மின்னல் போல் மின்னின தங் பற்கள். அவனது சிவந்த உடலில் ரத்தமே அவன் உடுத்தியிருந்த மல் துணியைக்கூட சாயத்துணியாக மாற்றிவிட்டது. முகத்தி

பரிசுக்கதை 4

வெர்வை துளிர்த்தது. வலது கையால் இடது மீசையை முறுக்கி விட்டான். இடது கையில் இருந்த திருகை வலது கைக்கு மாற்றினான். ஏதோ ஒரு நிர்மானத்துக்கு வந்தவன்போல் பெருமூச்சு விட்டுக் கொண்டு நிமிர்ந்து பார்த்தான்.

வீரய்யத்தேவன் ஒரு பாகத்திலே செய்த பினை வயிரக் கழியைத் தவிர வேறு ஒன்றையும் வைத்துக் கொள்ளவில்லை.

மந்திரவாதிகளைப்போல் ஒருவருடைய பார்வை ஒருவருடைய உள்ளத்தைக் குத்திப் பார்த்துக் கொண்டிருந்தது. வைத்த விழி வாங்காமல் ஒருவரை ஒருவர் நெருக்கினர், வாலைச் சுழற்றி உறுமும் சிங்கத்தைப்போல.

'ஹோ' என்று அலறும் பேய்க் காற்றின் ஓசைக்குப் பதில் 'ஹூம்—ஹூம்,' என்று ஒருவரைப் பார்த்து ஒருவர் சீறும் சீறல்தான் கேட்டது.

6

உள்ளங் கையால் வாயைத் துடைப்பது போல் மீசையை ஒதுக்கிக்கொண்டே, ஆத்திரத்தை வீரய்யன் சற்று அடக்க ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான், ராமபாண்டியனைப் பார்த்து.

"என்னண்ணே, எங்கே இப்படி?" என்று சிரித்துக்கொண்டே கேட்டு வைத்தான் வீரய்யன்.

"என்ன தம்பி, பண்றது? விவகாரம்னு வராமே இருக்க முடியுதா! சரி, என்ன சமாச்சாரம்? ஒங்க பட்டி ஆட்கள், எங்க ஆட்களை அடிக்க விரட்றாங்களோ!" என்றான் பாண்டியன்.

"என்னண்ணே, பச்சைக் குழந்தை காட்டம், தலை சாஞ்ச கிடக்கிற பயிரையெல்லாம் போட்டு மிதிக்கிறாங்க உங்க ஆளு! அதைக் கண்டுக்காம பேசறீங்களே, என்னமோ பேச்சு!" என்றான் வீரய்யன்.

"சரி ... அது கிடக்கட்டும்! என் அத்தை மகனோட மல்லுக்கு நிக்கறே? பேசாமே அவன் கேக்கிறதைக் கொடுத்து விட்டு ஒதுங்கிப் போறதுதானே? நமக்கேன் வீணு பணக்காரன் பகை?"

"என்ன இது! அண்ணே பேசற பேச்சா இல்லியே?"


"புறவு — அண்ணன் பேசற பேச்சு எப்படி யிருக்கும்?"

"இல்லே! இது அண்ணன் பேச்சே இல்லே,......பின்னே, என்னண்ணே, நீங்க சொல்றது? 'வல்லான் வகுத்தது வாய்க்கால்'னு சொல்றீங்க இல்லியா? அவன் பணக்காரன்! அவன் பேராசைக்குக் குடிக்கக் கஞ்சிகூட இல்லாமே எல்லாத்தையும் கொடுத்து விட்டு, நாங்க திண்டாடணும், இல்லேன்னு பணக்காரன் பகை 'இருக்கு'ன்னு தலையைக் கொண்டு போய்டு மாக்கும்! தேவலையைப் பாருங்க, அண்ணே!"

"தம்பி, பதறாதே! நிதானிச்சுப் பேசு. என்ன இருந்தாலும் எல்லை தவறக்கூடாது பாரு? மணலிலே நொய்யைக் கொட்டிப் புடலாம். அள்ளறத்துக்கு ஆகுமா?"


"சரிதாண்ணே, சொல்றதென்ன? நான் ஒங்கக் கிட்டேதானே தயாரானேன்? இப்ப இவன் பகைக்காகவா பயப்புடுவேன்? அவங் கிட்ட போடப்போற சண்டை பணத்துக்கும், பணத்துக்கும் அல்ல, பார்வேமென்னு வரையிலும் போய்ப் பார்க்க? இது பலத்துக்கும், பணத்துக்கும்—ரோசத்துக்கும், நிமிருக்கும் நடக்கப்போறது! ஹூம்......காட்டட்டும், அவனுலே ஆனதை! என்னமோ அவன் நினைக்கலாம், நான் ஒண்டிக்காரன் அவங்க கையிலேதான் போலீஸ் எல்லாம் இருக்குன்னு! என்னதான் போலீஸுக்குத் தான் தானா அழுத்திருக்கட்டும் பொருமலுச் மண்ணுலே கால வைக்கிறதுன்னு கொஞ்சம் யோசனைதான். அது அவனுக்கென்ன தெரியும்? பணத்தை விழுங்கத் தெரியும், கக்கத்தெரியும்! ஆண் தந்தவயிருந்தால் வரட்டுமே. கைக்குக் கை, நேருக்கு நேர்! பொட்டைபாட்டம் ...... நீங்க ஒரு பக்கம்!" என்று ஆவேசத்துடன் பேசினான், கையிலிருந்த கழியை ஆட்டி ஆட்டி.

"டேய்! வாயை அடைக்கிப் பேசு, கஷ்டம் வரும் வீணு! வருத்தப்படாதே, கோபப் படுத்தாதே!" என்று ஆள்காட்டி விரலில் எச்ச



சித்துவிட்டுச் சற்று உரத்த குரலில், "அந்தப் பயல் விவகாரம் கிடக்கட்டும்டா!- எனக்குத்தான் என்ன வைச்சுப் பேசியிருக்கே இது வரையிலும்! என்னமோ, பொறுத்துப் பொறுத்துப் போனு, வப்பர் பந்தின் ஆட்டம் மாதிரி எகிறி எகிறிக் குதிக்கிறியே? நான் யார் தெரியுதா! நான் யார் தெரியுமாடா?" என்று மார்பைத் தட்டிக் காட்டிக் கேட்டான் ராமபாண்டியன்.

"அண்ணே, ஒரு விராடி பேசினாலும் பேச்சுத்தான், நான் மூச்சுடும் பேசினாலும் பேச்சுத்தான்! இதுவரையிலும் மூகம் கொடுத்துப் பேசியதே ஒங்களுக்காகத் தான் அவனுக்குப் பயந்து கிட்டு இல்லேங்கிறதே, இப்பனுச்சும் தெரிஞ்சு குங்கோ! உங்களுக்கு என்னுச்சும் நான் மரியாதை செய்யறதன்னு இப்படியா செய்யறது? எதுக்காக உங்களை உத்தேசித்து என் நிலத்தை அவனுக்குக் கொடுத்துட்டு நான் திண்டாடணும்? என்னமோ அண்ணே, வந்திங்களா, இருக்க, ஒரு வருஷமானாலும் எங்கூட. ஏதோ எங்களுக்குண்டானப் பட்ட சொய்யோ அரிசியோ, இருந்தா, பொங்கிச் சாப்பிடுவோம். இதைத் தவிர்த்து ஒரு தம்பிடிகூட இனிமே கொடுக்கிறது இல்லையானு நிர்மானிச்சுப்புட்டேன்! என்னு. இப்படிப் பார்த்துப் பார்த்துத்தான் பதினெட்டுப் பட்டியாயிருந்த பொருமனூர் சீமை, உலக்கை தேஞ்சு உளிப்பிடி ஆறுப் பில இப்போ ஒன்பது பட்டியாப் போயிட்டது. நான் ஒருத்தன்தான் கிலம் சீரோட இருக்கேன் பச்சு, பச்சன்னு! அதையும் உட்டுட்டா எப்படி? என்னமோ, ஒங்களுக்காக வேணும்னு நான் அவருகிட்ட போன மாசம் பேசினபடி கணக்கைத் தீர்த்துக் காது கின்னிக்கிறேன். இதைத் தவிர்த்து விவகாரம் புரியணும்னு நானே அங்கே வந்து பேசிக் கிறேன். இல்லே, ஆளே விட்டு ரூட்டி பண்ணுவேன்னு அப்புறம் வீண் துன்பம் தான்! அந்தக் கருப்பையா பொதுவாச் சொல்லிப்புட்டேன், சொல்லிப்புட்டேன்!" என்று கூறிவிட்டுக் கீழே குனிந்து ஒரு பிட்டிகை மண்ணை யெடுத்து அவன்



"உங்க வீட்டுக்கு உண்டியல் எடுத்துக்கிட்டு வந்தாங்களே, என்ன போட்டே?"
"அவாரம் போட்டேன்!"

பாதத்தில் போட்டுவிட்டு கருப்பையன் கோவி வெறித்துப் பார்த்தான்.

அப்போது புளியமரத் தின் மேல் ஆந்தைகளின் சண்டை நடந்து கொண் டிருந்தது. 'ஹோ' என் அனல் காற்று அலறி சென்றது.

ஒரு கணம் அமைதி.

7

"துன்பம், யாருக்குடா ஹூம்......... துன்ப யாருக்கு?" என்று அதட்டி கேட்டான் ராமபாண்டியன்

"யாருக்குக்கிறதே கறுப் பையாவையல்ல கேக்கணும் என்னைக் கேட்டா?" என் றான் வீரய்யத் தேவன்.

"என்னடா கருப்பையன் வைக் கேக்கிறது? நீயு நாளும் பேசறப்ப கருப்பை யாவை என்ன கேக்கிறது?"

"ஆமாம், காயம் யாருக்கிட்டே இருக்கு தன்னு புரிய வாண்டாம்?"

"காயம் இப்ப உங் கையிலேதானு?"

"யாரைக் கேட்டுக்கிட்டுக்கிறேன்?"

"டேய், சீறத்து, போதும். எங்கப்பன் மேல் ஆணையா இதைத் தீர்க்காமே திரும்ப இல்லேடா! என்ன வந்தாலும் வரட்டும்!" என்று சொல்லிக்கொண்டே திருக்கை வாளை நீட்டிச் சொடுக்கிக் காட்டினான் ராம பாண்டியன்.

வீரய்யன், தலையைச் சாய்த்துக் கையால 'சலாம்' செய்து விட்டு திமிர்த்து "அண்ணே! வருத்தப்படாதிங்க. இதை உட்டுட்டு அந்தண்டை போங்க. பிறகு எல்லாம் பேசிக்கலாம், விவகாரம் எதுவு பேசறதுக்கு இது இடமில்லே. மத்தபடி எந்தச் சிறுப்பறுக்கும் இந்தப் பொருமனூர் புள்ளே சளைக்காது!...... ஹூம்!" என்று வெட்டிப் பேசிச் சிங்கம்போல் உறுமினான்

"ஹூம்...ஹூம்...இவ்...வளவுதானு... டேய், கட்டைப் பயலே! சட்டி எட்டி ஊரம்தான் பாயும், தெரிஞ்சுக்கோடா எங்க ஆளுங்க நடினுக்கூட அஞ்சறவ நானில்லேடா! வாடா, ஒரு கை பார்த்து வோம், உங் கருப்பையாவின் முடிவை தான்!" என்று ஆவேசத்துடன் ஆர்ப்பரி

...க்கொண்டு பாய்ந்தான் ராமபாண்டியன். வீரய்யனை நோக்கிச் சொடுக்கினான், திருக்கை வாலை. "விக்... பளார்" என்று சத்தம் காதைத் துளைத்தது. "அண்ணே!" என்று அலறிக் கொண்டு ராமபாண்டியனைக் கட்டித் தழுவிக் கொண்டான் வீரய்யத் தேவன். — அடி தவறி விட்டது.

"தூத் சனி!" என்று திருக்கை வாலைத் தூக்கி எறிந்து விட்டு, இரத்தம் வழியும் தன் வலது புறத்தைப் பார்த்துக் கொண்டான் ராமபாண்டியன்.

வீரய்யன் தூர விலகி நின்று, "என் அண்ணே, நீங்க சொல்லிக் கொடுத்ததை மறந்துடுவேனா?" என்றான் பெருமிதத்துடன்.

"அடே, இப்ப!" என்று சொல்லிக் கொண்டே பாண்டியன், மரத்தில் கொத்தியிருந்த நீண்ட அரிவாளை எடுத்து வீசினான் வீரய்யனின் கழுத்தை நோக்கி.

"ஏ, காளி!" என்று வீரய்யன் குனிந்து பாண்டியனின் காலை இறுகப் பிடித்துக் கொண்டான் பின்னுக்குப் போகாமல்.

வீசிய அரிவாள் புளியம்பட்டையைச் சீராய்த்து எறிந்தது. 'ஹூம்' என்று பெருமூச்சு விட்டான் ராமபாண்டியன்.

வீரய்யன் கையிலிருந்த பனங் கழியால், பாண்டியனின் மணிக் கட்டைப் பார்த்து அடித்தான். நடுவாங்கிய கை அரிவாளை விட்டு விட்டது.

'விக்...விக்' என்று கற்கள் சுற்றிக் கொண்டு பறந்தன, பக்க வாட்டில் பாண்டியனின் ஆட்கள் வரும் நெருக்காதபடி.

தன் கையை முறுக்கிக் கொண்டு முறைத்துப் பார்த்த ராமபாண்டியனை, "என் அண்ணே, இந்தப் பயல்களை யெல்லாம் நம்பிக் கூட வந்துட்டீங்களே?" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் வீரய்யன்.

"டேய், போதும் வாய்ப் பேச்சு" என்று ஆக்ரோஷத்தோடு சொல்லி விட்டு, காட்டாமணக்குச் செடிக்குப் பக்கத்தில் கிடந்த இரண்டு கம்புகளை எடுத்துக் 'கிருகிரு' என்று சுழற்றினான் ராமபாண்டியன். கம்பு சுழலும் வேகத்தில் பறந்து வரும் கவண் கற்கள் பட்டுப் பொடிப் பொடியாய் உதிர்ந்தன. 'ஹோ ஹோ' என்று கம்பு அலறி மண்ணைக் கிளப்புகிறது. அருகிலுள்ள இலைகளை அறுத்து எறிகிறது.

மடியிலிருந்த ஜோடிக் குத்துக் கட்டைகளை எடுத்து வீரய்யன் இரண்டு கையிலும் மாட்டிக்கொண்டு, குதித்தெழுந்து குத்துகிறான்; பாய்ந்து எழுந்து குத்துகிறான்; எகிறி எகிறிக் குத்துகிறான்; கம்பையும் கட்டுகிறான்!

எல்லாவற்றையும் கட்டித் தட்டி மடக்குகிறான் ராமபாண்டியனும்.

தூர தூர நின்று கல்லை வாரி வீசும் பொருமலூர்ப் பெண்கள் வயிற்றில் நெருப்பைத்தான் கட்டிக் கொண்டு இருந்தார்கள்.



"எப்படியும் பொருமலூர் மண்ணு மகிமை அத்துப் போவாதும! எல்லாம் கருப்பையா தான் மனசு வைக்கணும். ஆனா, என்ன வந்தாலும் புள்ளையைத் தனியே மட்டும் உட்டுட்டுப் போகக்கூடாது, என்னடி, நான் சொல்றது?" என்று எல்லோரையும் பார்த்துக் கேட்டாள் ஒருத்தி.

"அக்கா! அப்படி நம்ம புள்ளைக்கு என்னாச்சும் நன்றாச்சு, நாமெல்லாம் சேர்ந்துக்கிட்டு அவனை மொத்திபுடணும் மொத்தி! அவன் வாத்தியாவிருந்தாலும் சரி, ப்பூ...எந்த வாத்தியாராச்சும் தன் சேதுக் கிட்டியே சண்டை போடுவானா, வெக்கமில்லாமெ!" என்றாள் இன்னொருத்தி.

"அடி, நம்ம ஆளு ரொம்ப சாத்திரிகக் காரரு. கொஞ்ச தைரியங்கூட. அவராட்டம் இந்த அம்பது பட்டிக்குள்ளே ஒருத்தரும் கிடையாது. அது மட்டும் தெரிஞ்சுக்கோ. எங்கே, இங்கிட்டு ரெண்டு கல்லைப் போடு" என்றாள் வேறொருத்தி.

"அடி, புள்ளே போச்சு, புள்ளே போச்சு! அட......ஹூம்......உங் கையை ஒடிச்சு வைக்கோ!" என்றாள் படபடப்புடன் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு முதியவள்.

அப்போது மணிக்கட்டில் அடி வாங்கிய வீரய்யனை, இரண்டு கம்பால் கிட்டி போட்டும் புளிய மரத்தோடு வைத்து நெரித்துக் கொண்டிருந்தான் ராமபாண்டியன்.

வீரய்யத் தேவன் "ம்ஹூம்—ஹூம்" என்று முக்கி முனகுகிறான்; புழுவாய்த் துடிக்கிறான்; பெருமூச்சு விடுகிறான், பிடியிலிருந்து தப்பிச் செல்ல.

"ஹச் ஹச்ஹா,—ஹூம்...... பணத்துக்கும், பலத்துக்கும் சண்டை! ஹச்ஹச்ஹா! எங்கே தம்பி......இன்னொருதரம் சொல்லு! எங்கே சொல்லு!" என்று பல்லை நறநற வென்று கடித்துக்கொண்டு பயங்கரமாகச் சிரித்தான் ராமபாண்டியன்.

9

"ஹூக்கும்" என்று கையிலிருந்த குத்தக் கட்டையை ராமபாண்டியனின் மூக்கைப் பார்த்து வீசினான் வீரய்யன்.

"டக்" என்று அடித்த அடி, ராமபாண்டியனின் மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகச் செய்தது.

ஒரு கம்பைக் கீழே போட்டுவிட்டுச் சற்றுப் பின்வாங்கி மூக்கைத் தடவிப் பார்த்தான் ராமபாண்டியன். கையில் ரத்தம் தோய்ந்து இருப்பதைக் கண்டான்.

பாய்ந்து விலகி நின்று, கையைப் பிடித்து விட்டு, கீழே கிடந்த கம்பை எடுத்து 'விரு விரு' வென்று சுற்றினான் வீரய்யன். இது வரை சூடு ஏறி வந்த சண்டை, பழுக்கக் காய்ந்த இரும்பைப் போல் கடுமையாகி விட்டது. ராமபாண்டியனும் சளைக்கவில்லை. ஒருவரும் அருகில் நெருங்க முடியவில்லை. யாரும் நின்று பார்க்க முடியாதபடி புழுதிப் படலம் கவிந்திருந்தது. அருகில் யாரும் நெருங்காதபடி கம்புகள் சுழன்றன. மேலே பந்தல் போட்டது போல் கற்கள் 'ங்...ங்' என்று உறுமிக்கொண்டு சென்றன.

"ஹாம், ஹூம்" என்று இருவரும் அடிக்கடி சத்தம் போட்டு ஒருவரை யொருவர் உற்சாகப்படுத்திக் கொண்டனர். இருவருக்கும் பலமான அடி. தரை யெங்கும் சொட்டுச் சொட்டாய் இரத்தம் சொட்டிக் கிடந்தது.

வீரய்யனின் மூட்டுக்கு மூட்டு அடித்துக் கட்டினான் ராமபாண்டியன். வீரய்யனும் கலங்கவில்லை. சமயம் வாய்க்கும் போதெல்லாம் ராமபாண்டியனின் தலையைக் குறி வைத்தே கம்பை வீசினான்.

கம்புகளின் சத்தம் இடி இடிப்பது போல் அதிர்ந்தது. அத்துடன் பாய்ந்து செல்லும் கற்களின் ஓசையும் கலந்து ஒலித்தது.

கடைசியில், ராமபாண்டியனின் கையிலிருந்த ஒரே ஒரு கம்பும் வீரய்யனின் அடியைக் கட்டும்போது ஒடிந்து விட்டது. கம்பை இழந்த பாண்டியன் வெறுங் கையோடு நின்றான்.

"ஹூம்...ம்" என்ற பேரிரைச்சல்! வேகமாய் வீசிய வீரய்யனின் கம்பு வியர்வையின் வழுவழுப்பால் கையிலிருந்து உருவிக் கொண்டு சென்றது.

உடனே ராமபாண்டியன் பாய்ந்து வீரய்யனை இரண்டு கைகளாலும் இறுகக் கட்டிக் கொண்டான். வீரய்யன் அவன் கக்கத்தில் கையைக் கொடுத்து அமுக்கினான். கூச்சமடைந்த பாண்டியன் பிடியைத் தளர்த்திச் சற்றுப் பின்வாங்கினான். வீரய்யன் விடுபட்டவுடன் தாமதிக்காமல் எகிறித் தலையால் ஒரு முட்டுக் கொடுத்தான், முகவாய்க்கட்டையின் மேல்.

உதடு கிழிந்த பாண்டியன், பரக்கப் பரக்க அக்கம் பக்கம் பார்த்தான் அச்சத்தோடு.

வீரய்யனோ பற்கள் பதிந்த தன் தலையைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

இருவருடைய கண்களும் ஒரு நீண்ட சலுக்கியை ஒன்றாய்க் கவனித்தன. இருவரும் பாய்ந்தனர் சலுக்கியை எடுக்க. வீரய்யன் பாண்டியனை மோதித் தள்ளி விட்டுச் சலுக்கியை எடுத்துச் செருகினான் அவன் அடி வயிற்றில்.

“ஹ்ஹா...ஹா” என்று ராமபாண்டியன் சாய்ந்து விழுந்து விட்டான். அவன் கை அருகில் கிடந்த சலுக்கியை எடுக்க நீண்டது.

வீரய்யன் தாவி அக் கையைக் காலால் மிதித்துக் கொண்டு விட்டான். ராமபாண்டியனின் கண்கள் சற்றுத் திறந்து மூடிக் கொண்டன.

அப்போது அவனுடைய வாய், “நான் நிரபராதி!” என்று சொல்வதுபோல் முணுமுணுத்தது.

“அட பாவி மகனே, உனக்கு ஏண்டா இந்த கதி?” என்று அருகில் ஓடினார்கள் பெருமனூர்ப் பெண்கள்.

ராமபாண்டியனின் இதயம் மட்டும் அப்போது மெதுவாக துடித்துக் கொண்டிருந்தது, மூக்கு யிழுக்கும் வண்டி மாட்டைப் போல. கை கால், ஒன்றும் அசையவில்லை.

வீரய்யன் அவன் அருகே போய், “அண்ணே, என்னுங்க அண்ணே! எல்லாம் நீங்க செய்துவிட்ட வேலை! அந்த அநியாயக்காரன் பேச்சைக் கேட்டு இப்படி வந்துட்டிங்களே! ஹூம் ... இப்படித்தான் பணக்காரன் சண்டைக்குப் பண்ணையக்காரன் பலி! — அண்ணே ராமண்ணே! என்னை மன்னிச்சுடு, என்னை மன்னிச்சுப்புடு!” என்று அவனுடைய தோள்களைப் பிடித்து உலுக்கினான் வெறி பிடித்தவன் போல.

அதே சமயத்தில், ராமபாண்டியனின் இதயத் துடிப்பும் யாரோ பிடித்து நிறுத்தியதுபோல் நின்று விட்டது.

“அப்புறம் வீரய்யன் சமாச்சாரம் என்ன ஆச்சு?” என்று பாகவதர் பெருமூச்சு விட்டுக் கொண்டே காச்சிமுத்துப் படையாச்சியைக் கேட்டார்.

“ஆவறது என்னங்க, கறுப்பையா இருக்கச்சே! அந்த மிராசுதாரே நேரா வந்து வீரய்யாகிட்டே ராசி பேசினாரு. ‘கொடுக்க வேண்டியதிலே பாதி தள்ளிபுட்டு எப்ப கொடுத்தாலும் வாங்கிக்கிறேன். இதுக்காக ஒண்ணும் மனக் கஷ்டப் படாதேன்னு சொன்னாரு. ஆனா வீரய்யா மட்டும் ‘அட போடா, ஒம் பணமும் சரி, நீயும் சரி’ன்னு முன்னே வாக்குக் கொடுத்த படியே, பொங்க நேர பணத்தைக் கொடுத்துக் கணக்கைத் தீர்த்துப் புட்டான்! அந்த ராம பாண்டியன் விழுந்த இடம் இப்ப வயலா யிருக்காம்! அங்கே இன்னிக்கும் ஒரு கலம் தூக்கலாவே காணுதாங்க, மத்த வயலைக் காட்டிலும்! இதுக்கென்ன சொல்றீங்க?” என்று கேட்டான் காச்சிமுத்துப் படையாச்சி, பாகவதரைப் பார்த்து.

“சொல்றதென்னடா!” என்றார் பாகவதர்.

“ஹூம் ...... எதுக்குச் சொல்ல வந்தேன்னா, நீங்க சொல்றீங்களே, பஞ்ச பாண்டவரு கதை, தருமரு வந்தாரு கர்ணன் வந்தாருன்னு! நம் கண் முன்னாலேயே கை நீட்டி ரெண்டு காசு வாங்கின தோசத்துக்காகத் துரோகம் பண்ணாம உசிரையே விட்டாரே ராமபாண்டியன், இதுக்கென்ன சொல்றீங்க!” என்று சொல்லி விட்டு நடந்தான் காச்சிமுத்துப் படையாச்சி, தோளில் மண்வெட்டியுடன்.



வைஸ்ராய் விருந்தாளி

கர்ஸான் பிரபு வைஸ்ராயாக இருந்த காலத்தில் ஒரு ஆங்கிலேய நண்பர் அவர் விருந்தினராக வந்திருந்தார். விருந்தாளி ஒரு நாள் வேட்டையாட விரும்பினார். உடனே பிரபு ஒரு இந்தியச் சேவகனை அவருடன் வேட்டைக்குத் துணையாக அனுப்பினார். வேட்டை முடிந்து வீட்டுக்குத் திரும்பிய இந்தியச் சேவகனைப் பார்த்து, கர்ஸான் “எப்படியப்பா, துரை எப்படிச் சுட்டார்?” என்று கேட்டார்.

“துரை என்னமோ நன்றாய்க் குறி பார்த்து அழகாகத்தான் சுட்டார். ஆனால், அதிர்ஷ்டம் மட்டும் மிருகங்களின் பக்கம் இருந்து விட்டது!” என்றான்.

யாருக்கு மறதி?

ஸோமாஸ்

"சசிலா, என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இன்னுமா டிரஸ் பண்ணிக் கொள்ளவில்லை?"

"இதோ, கிளம்பியாச்சு! இந்தாருங்கள், அதுவரை இந்த நாவலைப் புரட்டிக் கொண்டிருங்கள்!" என்றாள் சசிலா.

"என்ன சசிலா, இந்த நாவலில் ஐந்நூறு பக்கங்கள் தானே இருக்கின்றன? நீ புடவை கட்டிக் கொண்டு வருகிற வரையிலும் படிக்கவேணுமே! இது போதாதே!"

"ஆமாம், போங்கள்! உங்களுக்கு எப்போதும் பரிகாசந்தான்!" என்று கூறிவிட்டுச் சசிலா டிரஸ் பண்ணிக் கொள்ளப் போனாள்.

மணி ஆக ஆகச் சீதாராமனுக்கு இருப்பே கொள்ளவில்லை. கூண்டில் அடைபட்ட புலியைப் போல் அங்கும் இங்கும் உலாவினான். நாடகத்துக்குக் கிடைத்திருந்த இலவச 'பாஸ்' வீணாய்ப் போய்விடப் போகிறதே என்று அவனுக்குக் கவலை!

கடைசியில் சசிலா, சர்வ அலங்காரங்களும் செய்துகொண்டு சீதாராமனுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள். உடனே அவன் ஒரே தாவாகத் தாவி வாசலுக்குப் போனான். ஆனால் அவன் திரும்பிப் பார்த்தபோது சசிலாவைக் காணோம்.

"சசிலா, சசிலா!" என்று இரைந்து கொண்டே உள்ளே வந்தான்.

"இதோ ஒரு நிமிஷம்!" என்று கூறிக்கொண்டே பவுடர் பூசிக்கொள்ள ஆரம்பித்தாள் சசிலா.

"சசிலா, நீ ஒவ்வொன்றாக நினைத்துக் கொண்டு இப்படித் தாமசம் பண்ணிக் கொண்டிருந்தால் நாம் நாடகம் பார்த்தாப் போலத்தான்!" என்று சீதாராமன் அவசரப்பட்டான்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு இருவரும் கொஞ்ச தூரம் போனதும், சசிலா திடீர் என்று தயங்கி நின்றாள்.

"என்? இன்னும் எதை மறந்து விட்டாய்?" என்று கேட்டான் சீதாராமன்.

"செருப்புப் போட்டுக் கொள்ள மறந்து விட்டேன்! இதோ......!" என்று கூறிவிட்டுச் சசிலா மீண்டும் வீட்டுக்கு வந்து கதவைத் திறந்து செருப்பைக் காலில் மாட்டிக் கொண்டு போனாள். சீதாராமன் நாழியாகி விட்டது என்று தவியாய்த் தவித்தான். ஓட்டமும் நடையுமாக இருவரும் பஸ் நிற்குமிடத்துக்குப் போனார்கள்.

ஒரு பஸ்ஸிலாவது இடம் கிடைக்க வேண்டுமே! "ஏறாதே! ஏறாதே!" என்ற பஸ் கண்டக்டரின் அதிகாரக் குரலுடன் பஸ்ஸெல்லாம் நிற்காமலே பறந்தன.

ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆகியும் பஸ் கிடைக்காமல் போகவே சீதாராமனின் முகம் வாடி விட்டது.

"சசிலா, இனிமேல் இங்கே நிற்பதில் பிரயோஜனம் இல்லை. பஸ் கிடைத்து நாம் அங்கே போனாலும் பாதி நாடகம் ஆகியிருக்கும். வா, வீட்டுக்குப் போகலாம். உன் மறதியினால் வந்த சங்கடந்தான் இது!" என்று சோகம் ததும்பும் குரலில் சீதாராமன் கூறிக்கொண்டே நகர்ந்தான்.

"நான் மட்டும் வேண்டுமென்று மறந்தேனா?" என்று கூறும்போது சசிலாவின் குரலிலும் சோகம் படர்ந்திருந்தது.

இருவரும் மௌனமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். உள்ளே போனதும் சீதாராமன் மிகவும் மனச் சோர்வுடன் சட்டையைக் கழற்றினான். 'தொப்'பென்று கீழே விழுந்த மணிபர்ஸுடன் ஒரு கடிதமும் கீழே விழுந்தது.

மணிபர்ஸைக் கையில் எடுத்துக் கொண்டு சீதாராமன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். நாடகத்துக்கு வந்த அனுமதிச் சீட்டுத்தான் அது. அதைப் பார்த்ததும் சீதாராமன் திகைத்துப் போய் விட்டான். ஆமாம், நேற்றைய தேதி போட்ட டிக்கெட்டு இன்று எப்படிச் செல்லும்?—நல்ல வேளை! சசிலாவுக்கு இது தெரியாது. அதைப் பற்றிச் சீதாராமன் பிரஸ்தாபிக்கவுமில்லை. எதை மறந்தாலும் கணவனின் தவறுகளை மாத்திரம் இடித்துக் காட்டுவதற்குச் சசிலா மறக்கமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியாதா, என்ன?



குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும் — குறள்

தன்னை நம்பியுள்ளவர்களின் க்ஷேமத்தை பாதுகாக்க விரும்பும் குடும்பத் தலைவன் காலத்தை எதிர் நோக்கி காத்திருப்பது தவறாகும். அன்றி, காத்திருப்பின் குடும்பமே கெட்டு விடலாம்.

குடும்ப க்ஷேமத்தை பாதுகாக்க
இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை விட
நவீன சாதனம் வேறொன்றும்
கிடையாது.

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.

மைலாப்பூர் :: மதராஸ்



கம்பர் தரும் காட்சி

131. விழவில்லையா காதில்!

○ ● ○

சாம்ராஜ்யம், சர்வாதிகாரம் எல்லாம் வணனுக்கும் அவனைச் சேர்ந்தவர் நக்குமே உரியதாய் இருந்தது. அதிகார றி தலைக்கு ஏறி விட்டது. யாரையும் படி வேண்டுமானாலும் துன்புறுத்த ம். ஆனால்; தங்களைப் பிறர் என்ன ரணத்தாலும் எதிர்க்கக் கூடாது.

இந்த மனப்பாங்கு ஆடவர்களைப் ாலவே பெண்டிரையும் பற்றி ந்தது.

இதை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக் ாண்டு பார்த்தால்த்தான் சூர்ப்பனகை ன் மன நிலை தெரியவரும்.

* * *

சீதையைத் தூக்கிக் கொண்டு போய் வேண்டும் என்று எத்தனித்து ள் மேல் பாய்ந்தாள் அந்த அரக்கி. ஷ்மணன் அதைக் கண்டு கொண்டான். படியே ஓடிப்போய் அவளைப் பிடித் கொண்டான். அரக்கி லேசுப்பட்ட ா? லக்ஷ்மணனைத் தாக்கினாள்.

இனி வருவில் விட்டுவிடக் கூடாது, தி புகட்டியே ஆக வேண்டும் என்று னனி, வாளால் சூர்ப்பனகையின் மூக்கு நவிய உறுப்புகளை லேசாய் அறுத்து டான் லக்ஷ்மணன்.

இது என்ன, நினைக்கக் கூடிய ரியமா!

உடல் வேதனை ஒரு பக்கம். ஆனால் ஒரு காரியம் அல்ல. மனசில் உண் ன வேதனையோ இப்படி அப்படி லை. தரையில் விழுந்து புரளுகிறாள். றுகிறாள் அரக்கி.

கேவலம் மனிதர்களா என்னை இப்படி லாம் அவமானப் படுத்த வேண்டும்? ஞ்க செகியும் படியாக உதைத்துத் ரையில் உருட்டினானே என்னை! என்ன எக்களிப்போடு தன் தோளையும் வீரத் தையும் பார்த்துக் கொள்ளுகிறான்! வெறும் மனிதன்!

சந்தம்

தானன தானன
தானன தானன

'உரம்நெரிந்து விழ, என்னை
உதைத்துருட்டி மூக்கரிந்த
நரன் இருந்து தோள்பார்க்க,
நான்கிடந்து புலம்புவதோ!
கரன் இருந்த வனம்அன்றோ;
இவைபடவும் கடவேனோ!
அரன் இருந்த மலைஎடுத்த
அண்ணாவோ! அண்ணாவோ!'

[உரம் நெரிந்து விழ: மார்பு நெரியவும் நான் கீழே விழவும்: நரன் இருந்து தோள் பார்க்க: வெறும் மனுஷனாகிய அந்த லக்ஷ் மணன் எக்களிப்போடு தன் தோள்களைப் பார்த்துக் கொண்டு உயிரோடிருக்க; கரன் இருந்த வனமன்றோ: கரன் என்னும் அரக்கப் பிரதானி காத்துக் கொண்டிருக்கிற வனம் அல்லவா இது: இவை படவும் கடவேனோ: இந்த விதமாக அவமானம் படவும் ஏற்பட்டு விட்டதே எனக்கு: அரன் இருந்த மலை எடுத்த: சிவபெருமானே வீற்றிருந்த கைலை மலையைச் சேர்த்துக்காய்த் தூக்கிய.— இராவணன் கைலாசமலையையே தூக்கப் பார்த் தான் என்பது புராணக் கதை. அதாவது, மகா சக்தி படைத்தவன் என்பது குறிப்பு.]

நான் ஏதாவது அக்கிரமம் செய்தேனா— இல்லையே! ஏதோ காதல் கொண்டேன். அதற்காக மூக்கிழந்தேன். இதை விட வெட்கக்கேடு வேறு என்ன இருக்கிறது? இந்த வசை என்றோடு நிற்கிற காரியமா?

நசையாலே மூக்கிழந்து
நாணம்இலா நான்பட்ட

வசையாலே நினதுபுகழ்
மாசுண்ட(து) ஆகாதோ!

திசையானை விசைகலங்கச்
செருச்செய்து மருப்பொசித்த

இசையாலே நிறைந்தபுயத்(து)
இராவணனே! இராவணனே!

[நசையாலே: காதல் கொண்ட காரண மாக; திசையானை விசை கலங்க செருச் செய்து மருப்பொசித்த: எட்டு திக்குகளிலும் பூமியைத் தாங்கி நிற்கும் மாபெரும் களிறுக ளோடு யுத்தம் செய்து அவைகளின் தந்தங் களையும் முறித்த காரணமாக; இசையாலே நிறைந்த புயத்து: புயவலிமையைப் பற்றிப் பாடல்கள் எண்ணிறந் தனவாய்ப் பாடப்பட்ட.]

'இந்தக் காட்டில் சாமானியப்பட்ட யாரோ இரண்டு பேர் என் மூக்கையும் காதையும் அறுத்து விட்டார்கள். இந்த அவமானத்தை என்னால் தாங்க முடிய வில்லை. உயிரே போய்விடும்!'

இப்படியெல்லாம் கதறுகிறாள்: யாரை நோக்கி?

காலம்அறின் இடைஇருவர்
காதொடுமூக்(கு) உடன்அரிய,

மானமதால் பாவியேன்
இவ்வமடியக் கடவேனோ?

தானவரைக் கருஅறுத்துச்,
சதமகனைத் தளையிட்டு,

வானவரைப் பணிகொண்ட
மருகாவோ! மருகாவோ!

[தானவரைக் கருஅறுத்து: தானவர் என்ற பலசாலிகளான பகைவர்களைக் கருஅறுத்து; சதமகனைத் தளையிட்டு: இந்திரனையே விலங் கிட்டு; வானவரைப் பணிகொண்ட: தேவர் எல்லாரையுமே வேலையாளாகக் கொண்ட: மருகாவோ! மருகாவோ; மருமகனுகிய இந்திரஜித்தே!]

'கரன் என்ன! தூஷணன் என்ன! உங்கள் வாளால் ஒரு வெட்டு வெட்டினால் பாறை கூட அப்படியே பிளந்து போய் விடும்! உங்களைச் சேர்ந்த வீரர்கள் தான் எத்தனைபேர் காவலா காக்கிறீர்கள் நீங்கள்!'

கல்சரும் படைத்தடக்கை
அடல்க்கர தூடணர்முதலா

அல்சரும் சுடர்மணிப்பூண்
அரக்கர்குலத்(து) அவதரித்தீர்!

கொல்சரும் படைக்கும்ப—
கருணனைப்போல்க் குவலயத்து

எல்லீரும் உறங்குதிரோ?
யான்அழைத்தல் கேளீரோ?

[கல்சரும் படை: கல்லை வெட்டும்படியா வாள், ஈட்டி முதலிய ஆயுதங்களைக் ... யாளும்; தடக்கை: பெரிய வலிய ... அடல்க்கர தூடணர் முதலா: வலிய க... தூஷணன் முதலாக; அல்சரும் சுடர்ம... பூண்: இருளை அகற்றும்படியான ரத்னங்... பதித்த ஆபரணங்களை அணியும்; அரக்... குலத்து அவதரித்தீர்: அரக்கர் குலத்துக்... புகழ் உண்டாகும்படி பிறந்தீர்: கொல்ச... படைக் கும்ப கருணனைப்போல்: கொல்... அருமையாய் அரிய படை ஏந்தும் கு... கருணனேபோல்; குவலயத்துள்: இந்... பரந்த பூமியில்; எல்லீரும் உறங்குதிரோ... எல்லோருமாக ஒன்றுகூடித் தூங்குகிறீர்க... யான் அழைத்தல் கேளீரோ: நான் க... உங்களை எல்லாம் அழைக்கிறேனே, கா... விழவில்லையா அது?]

உடல் வேதனையும் மன வேதனை... சேர்ந்தால்ப் பெண்ணுள்ளம் என்ன பா... படும், என்ன வெறிக்கெல்லாம் உள்... கும் என்பதை நேரில்ப் பார்த்திருந்தா... தெரியவரும். அந்த உள்ளத்தின் அல... எவ்வளவோ தூரம் எட்டும். சூர்ப்பன... யின் அலறல் ஆயிரம் வருஷத்துக்கு இ... பால் எட்டி வந்து நம்முடைய காதிலே... விழுகிறது. தமிழ் வாக்கும் அ... தானங்களும் செய்கிற வேலை இது!

காரணம்



"என்ன ஐயா, அவர் எதற்காகக் கை... தடியை வைத்துக்கொண்டு பேசுகிறார்?"

"அவர் ஒரு ரேடியோ பிரசங்கியா... அவருக்கு முன்னாலே 'மைக்' மா... ஏதாவது ஒன்று வைத்திரா விட்டால்... குக்குப் பேசவே வராதாம்!"

மந்திரப் போர்வை

வி. சுலோசனா

பூதகிரி என்ற மலையில் ஒரு பிரம்மாண்டமான பூதம் வசித்து வந்தது. அது மகா பொல்லாத முரட்டுப் பூதம். அதற்குப் பசி எடுத்தபோதெல்லாம் நாட்டுக்குள் வந்து, ஆடு மாடுகளையும், மனிதர்களையும் குழந்தைகளையும் ஈவிரக்கமின்றி விழுங்கி விட்டுப் போகும்.

நாளுக்குநாள் அதன் அக்கிரமம் அதிகரித்து வரவே, அரசனுக்கு ரொம்பக் கவலையாய்ப் போய்விட்டது. பூதத்தைக் கொல்பவருக்குப் பாதி ராஜ்யமும், தன் மகளைக் கல்யாணமும் செய்து கொடுப்பதாகத் தேசமெங்கும் பறை சாற்றச் செய்தான். பல தைரியசாலிகள் பூதத்தைக் கொல்வதாக மார் தட்டிச் சென்றார்கள். ஆனால் போனவர்கள், போனவர்கள்தான். ஒருவராவது திரும்பவில்லை.

பூதகிரியிலே அமரசிம்மன் என்று ஒரு தையற்காரன் இருந்தான். அவன் வீட்டில் ஒரு மந்திரப் போர்வை இருந்தது. அதைப் போர்த்துக்கொண்டவர்கள் அப்படியே கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருப்பார்கள். அப்படிப்பட்ட மந்திரசக்தி வாய்ந்த போர்வை அது. ஒரு நாள் அமரசிம்மன் அந்த மந்திரப் போர்வையை எடுத்துக் கொண்டு பூதத்தை எதிர்க்கப் புறப்பட்டான்.

அமரசிம்மன் மலை மீதேறி வரும் போது, பூதம் பிரம்மாண்டமாக மலையுச்சியில் உட்கார்ந்திருந்தது. அவனைக் கண்டதும், ஒரு பெரிய பாறையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு, வேகமாய் வந்து கொண்டிருந்தது. அருகில் வந்து விட்டது! தற்செயலாய்ப் பின்புறம் திரும்பின அமரசிம்மன் பதுங்கி வரும் பூதத்தைக் கண்டு விட்டான். உடனே சடக்கென்று போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு மாயமாய் மறைந்து விட்டான்.

மறைந்து சென்ற அமரசிம்மன் ம
யுச்சியில் நின்று, குரல் கொடுத்தா
அவன் குரல் கொடுத்த இடத்துக்கெ
லாம் ஓடி அவனைக் காணாமல் பூ
களைத்து விட்டது.

கடைசியாக அமரசிம்மன் நி
கொண்டிருந்த இடம், ஒரு செங்
தான பாறை. அந்தப் பக்கம் கிடு
பள்ளம்! ஆபத்தான இடம்! பூ
அவனை அங்கே கண்டதும், கை
லிருந்த பாறையை எறிந்து வி
அவன்மேல் பாய்ந்தது. அமரசிம்
உடனே மந்திரப் போர்வைக்கு
மறைந்தான். பாய்ந்த வேகத்தில் பூ
கிடுகிடு பாதாளத்திலே தலைகுப்
விழுந்து விட்டது.

பூதகிரியில் எங்கும் கொண்ட
டம். மலையிலிருந்த பூதம் தொலைந்
கவலை மலையேறி விட்டதென்று
லோரும் ஆனந்தமாகக் குதித்தார்
அமரசிம்மன் கொலு மண்டபத்
நுழைந்தபோது, அங்கிருந்தவர்
கரகோஷம் செய்து வரவே
அவனை வாழ்த்தினார்கள். அமரசிம்
அரசனருகில் சென்று முறைப்
வணங்கி நின்றான். அரசன் அவ
கூர்ந்து கவனித்தான்.

"அமரசிம்மா, உன் திறத்தை
கிறேன். ஆனால் ராஜவம்சத்தில் பி
காதவனுக்கு ராஜ்யம் கொடுப்ப
ராஜகுமாரியை மணம் செய்விப்ப
வழக்கத்திற்கு விரோதம். சாஸ்
சம்மதம் பெறாதவை. ஆகைய
ராஜ்ய வெகுமதிக்குப் பதிலாக,
உடல் எடைக்குச் சரியான பெ
தருகிறேன், கவலைப்படாதே!" எ
தேனொழுகப் பேசினான் அரசன்.

அரசன் தன்னை ஏமாற்றி வி
தைக் குறித்து அமரசிம்மனு
கோபம்தான். ஆனாலும் அதைக்
டிக் கொள்ளாமல், "அரசே,
விஷ்டம் என் பாக்கியம். நான்
டிற்குச் சென்று, மங்களஸ்நா

..டித்து, துலாபாரத்திற்குத் தயா..ாக வருகிறேன்" என்று பணிவுடன் ..த்தரவு பெற்றுக்கொண்டு, சபையை ..ிட்டு வெளியேறினான்.

அரசன் திடீரென்று இவ்விதம் ..மாற்றுவான் என்று, அமரசிம்மன் ..னவிலும் கருதவில்லை. "எனக்கு ..மலிந்த தேகம், அதிகத் தங்கம் தர ..வண்டி யிராது என்று எண்ணித் ..ானே அரசர் இந்தச் சூழ்ச்சி செய்..ிருக்கிறார். இருக்கட்டும், அவருக்குத் ..தக்க பாடம் கற்பிக்கிறேன்!" ..ன்று முணுமுணுத்துக் கொண்டே ..வன் தன் வீட்டை நோக்கிப் போய்க் ..கொண்டிருந்தான். வழியில் 'டிங் ..ாங்' என்று மணிச் சத்தம் கேட்டது. ..மரசிம்மன் ஒரு புறமாக ஒதுங்கி ..ன்றான். ஆடி அசைந்து கொண்டு ..வனைத் தாண்டிச் சென்றது ஒரு ..கோயில் யானை. யானையைப் பார்த்த..ும், அவனுக்கு ஒரு யோசனை ..தோன்றியது. யானைக்குப் பின்னால் ..சன்று கொண்டிருந்த பாகனிடம் ..டிப்போய் அவன் காதோடு காதாக ..தோ ரகசியமாகச் சொன்னான். ..ாகனும் சரியென்று தலையசைத்தான். ..பொழுது புலர்ந்தது; அமரசிம்மனைத் ..ராசில் வைத்து நிறுப்பதற்காக, ..ரண்மனை நந்தவனத்தில் பெரிய ..ராசு தயாராகத் தொங்கிக் கொண்..ிருந்தது. சுற்றிலும் அரசன், மந்திரி, ..பிரதானிகள், வேடிக்கை காண ..ந்திருக்கும் ஜனங்கள் எல்லோரும் ..டி யிருந்தார்கள். அமரசிம்மனும் ..ந்து சேர்ந்தான்.

அவனை ஒரு தராசுத் தட்டில் நிற்க ..வைத்து, மறு தட்டில் ஒரு மூட்டை ..ங்கத்தை வைக்கும்படி உத்தர..ிட்டான் அரசன். ஆனால், அமரசிம்மன் நின்ற தட்டு அசைய வில்லை. "இன்னொரு மூட்டை கொண்டு வா" என்றான் அரசன். அவர் குரலில் முன்னிருந்த உற்சாக மில்லை. இன்னொரு மூட்டை. அதுவும் பிரயோஜன மில்லை. மூட்டையின்மேல் மூட்டையாக அடுக்கி வைத்தும், அமரசிம்மனிருந்த தட்டு அசையாதிருந்த அதிசயத்தைக் கண்டு, அங்கு கூடியிருந்தவர்களெல்லோரும் பிரமித்துப் போனார்கள்! அரசனின் முகம் களையிழந்து மங்கிப் போய்விட்டது.

"அரசே, என் உடல் எடைக்குத் தங்கம் தருவதானால், இந்த ராஜ்யம் முழுவதையும் விற்று வைத்தாலும் முடியாத காரியம். ஆகையால், தாங்கள் முதலில் வாக்களித்தபடி நடப்பதே நலம். பிறகு தங்கள் இஷ்டம்" என்று சொன்னான் அமரசிம்மன்.

அரசன் வேறு வழியில்லாமல் சம்மதித்தான். உடனே அமரசிம்மன் மந்திரப் போர்வையை இழுத்து விட்டான். அதற்குள் அதுவரை மறைந்து நின்று, தராசுத் தட்டை ஒரு காலால் மிதித்துக் கொண்டிருந்த யானை வெளிப்பட்டது. அமரசிம்மன் புன்சிரிப்புடன், "அரசே, இந்தப் போர்வை மகா விசித்திரமானது. இதைப் போர்த்துக் கொண்டவர் யார் கண்ணிலும் படாமல் மறைந்திருக்கலாம். இதன் சக்தியால்தான் பூதத்தை வென்றேன். தங்களையும் வெற்றி கொண்டேன்" என்றான்.


அடுத்த சுபயோக சுபதினத்திலே, அமரசிம்மனுக்கும் அரசகுமாரிக்கும் விமரிசையாக திருமணம் நடந்தேறியது.



புதியது!

நீங்கள் இதுநாள்வரை ருசி பார்த்துள்ள யாவற்றையும்விடச் சிறந்தது

இதோ, மிட்டாய் வகையறுக்களில் சில புதிய நிறுசுகள். நீங்கள் இதற்கு முன் ருசி பார்த்திருக்கவே மாட்டீர்கள்! அச்வினி மிட்டாய்களும், டாப்பிகளும் இனிப்புக்கும் பெயர் போனவைகள். குளுக்கோஸ் உட்பட மிகச் சிறந்த பொருள்களைக் கொண்டே அவைகள் செய்யப்படுகின்றன.



வெகு சீக்கிரம், பூராவும் சுயமாகவே இயக்கப் பெற்ற இயந்திரங்கள் வேலை துவக்கி வரும். அப்பொழுது, சிறுவர் சிறுமியர்கள், வயதானவர்கள் இரு தரப்பாருடையவும் ருசியைக் கவரும் இன்னும் மெத்தனையோ வித விதமான நிறுசு மிட்டாய்கள் கிடைக்கலாகும்.


தி மஹாலக்ஷ்மி ஷுகர் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஹமீரா, கபுர்த்தாலா ஸ்டேட்.

பம்பாய், மதராஸ், கல்கத்தா மற்றும் தென் இந்தியாவுக்கு ஏஜண்டுகள் :

மெஸர்ஸ். ஜெபக்கர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட்., 21, லிங்க செட்டித் தெரு :: தபால் பெட்டி 21, மதராஸ் ஷா ஆல்வி விலாதர் பில்டிங், மட்டாஞ்சேரி ரோடு போஸ்டு, த. பெ. 47, கொச்சி

M.A. 4637



மிகவும் குளிர்ச்சியுடையது!

களைப்பை போக்குகிறது!

உத்ஸாகத்தை அளிக்கிறது!




வினோலியா உபயோகித்து ஸ்நானம் செய்தால் குளிர்ச்சி உண்டாகும் போது நீங்கள் ஏன் வெப்பத்தினால் கஷ்டப்பட வேண்டும். இந்த சோப்பின் வெண்ணிறம் வாய்ந்த நுரை உங்களை சுத்தமாக்கும் பொழுது ஏன் வியர்வையுடன் இருக்கவேண்டும். வினோலியா சோப்பின் வாசனை சுறுசுறுப்பையும், உத்ஸாகத்தையும் உண்டுபண்ணி, மனதிற்கு சுகத்தையும் அளிக்கிறது.

வினோலியா
ஒயிட் ரோஸ் சோப்பு



VWR. 17-50 TM

VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND



தோப்பு விருந்து

பொதுவாகக் குறிப்பிட்ட சிலருக்காக நடத்தப்பட்டு வந்த சில சம்பவங்கள் இப்போது ஒரு காரியத்தில் ஈடுபட்ட பலர் ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் விசேஷ தினமாகிவிட்டது. கலாசாலைகளும் இதர ஸ்தாபனங்களும் ஆலைத் தொழிலி விடுபட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தேனீர் விருந்தளிப்பதுண்டு.

வேறு சந்தர்ப்பங்களில் சுலபமாக நெருங்க முடியாத பலருடன் பழகவும், தேனீர் அருந்திக் கொண்டே ஜாதிமத பேதமில்லாமல் ஒருவரோடொருவர் பேசிப் பல விஷயங்களைக் கிரஹிக்கவும் உதவுவது இத்தகைய உல்லாசமான விருந்துகளே.

இது போன்ற விருந்துகளில் பலரும் கூடுவதுண்டு. எவ்வூரி விருந்து வந்தவரானாலும் தன் சொந்த ஊரில் கிடைப்பதும் எப்போதும் புது மணம் நிறைந்த ப்ரூக் பாண்ட் தேயிலையைக் கட்டாயம் கண்டு கொள்வார்.




புத்தப் புதுமை—குறைந்த
நேரமே—தோட்டத்தி
லிருந்து தொண்டைக்கு.

ப்ரூக் பாண்ட்

“இரு இலையும் ஒரு மொட்டும்”


SUNSHINE
Glaxo
ஸன்ஷைன் கிளாக்ஸோ
குழந்தைகளை புஷ்டியாக
வைக்கிறது


சகல வலிகளிலிருந்தும்
'வி'மோசனம்
ஸாரிடோன்
சாப்பிட்ட 10 நிமிஷங்களில்!
Saridon



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Pr
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



LKI பிப்ரவரி 17, 1946 4 அணா

Regd. No. M. 4392